# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 14 வள்ளுவர் ஆண்டு 2030 ஐப்பசி 2 செவ்வாய்க்கிழமை (19-10-1999) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 280


## அம்பகாமம் பகுதியில் மோதல்கள் ஓய்வு

### இருதரப்பும் ஷெல் வீச்சு

வவுனியா, ஒக் 19

அம்பகாமம் ஒலுமடு பகுதிகளில் கடந்த வியாழனன்று படையினர் மேற்கொண்ட நகர்வு முயற்சிகளை அடுத்து மூண்ட சண்டை தணிந்து விட்டபோதிலும் இருதரப்பினரும் தொடர்ந்து மாறி மாறி ஷெல் தாக்குதல்களை நடத்துவதால் அப்பகுதி அதிர்ந்து கொண்டிருப்பதாக

(10 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் தாதியர் வேலைநிறுத்தம்

வவுனியா, ஒக். 19

வவுனியா ஆஸ்பத்திரி தாதியர்கள் நேற்றுக்காலை திடீர் வேலை நிறுத்தப் போராட்டத்தில் குதித்தனர்.

கடந்த 5 மாதங்களாக வழங்கப்படாதிருக்கும் மேலதிக வேலை நேரக் கொடுப்பனவை வழங்கக் கோரியே வேலைநிறுத்தப் போராட்டம் நடத்தப்படுவதாகத் தெரி

(10 ஆம் பக்கம்பார்க்க)

## வங்காலையில் அதிரடி; எட்டு பொலீஸார் பலி!

வவுனியா, ஒக். 19

மன்னார் மாவட்டம் வங்காலையில் நறுவிலிக்குளம் என்னும் இடத்தில் முன்னணிக் காவலரண்கள் மீது நேற்று அதிகாலை விடுதலைப் புலிகள் நடத்திய திடீர்த் தாக்குதலில் இன்ஸ்பெக்டர் உட்பட எட்டுப் பொலீஸார் உயிரிழந்தனர்; 14 பேர் காயமடைந்தனர்.

தாக்குதலில் கொல்லப்பட்ட பொலீஸாரில் மூவரின் சடலங்கள் தலை துண்டிக்கப்பட்ட நிலையில் காணப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இத்தாக்குதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் ஏற்பட்ட சேத விவரம் குறித்து எதுவும் தெரியவரவில்லை.

(ஐ-7-21-164)

# பேச்சுக்கான முயற்சியினைக் கூட இப்போது நாம் கைவிட்டுவிட்டோம்!

## நீலன் படுகொலையை அடுத்து இதுவே நிலை என்கிறார் சந்திரிகா

சென்னை, ஒக்ரோபர் 19

"நீலன் திருச்செல்வம் படுகொலைச் சம்பவம் அம்பாறை மாவட்டத்தில் அண்மையில் சிங்களப் பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டமை ஆகியவற்றை அடுத்து பேச்சுக்கான வாய்ப்புகள் ஸ்தம்பிக்கும் நிலையை நாம் நாடவேண்டியதாயிற்று. பேச்சுக்கான முயற்சியைக்கூட நாம் நிறுத்தி விட்டோம். இந்தச் சந்தர்ப்பத்தில் எமக்கு பேச்சுக்களில் ஈடுபாடு கூடக்கிடையாது".

– இவ்வர்று கூறியுள்ளார், இலங்கை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க,

'இந்து' நாளிதழுக்கு தாம் அளித்த பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்திருக்கின்றார். இந்தப் பேட்டியை "இந்து" நாளிதழ் நேற்றுப் பிரசுரித்திருந்தது. அந்தப் பேட்டியில் ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்துள்ள முக்கிய கருத்துகளின் சாரம் வருமாறு;

"எனது அரசு சமர்ப்பித்துள்ள தீர்வுத் திட்டம், அரசமைப்புத் திருத்தம் ஆகிய இனப் பிரச்சினைக்கு உகந்த தீர்வாக அமையும்.

"மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துடன் பேச்சு நடக்க வேண்டும் என்று புலிகளும் எதிர்க்கட்சியான ஐ.தே.கவும் கூறுவதை ஏற்க நான்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## மடு மாதா சிலையைப் பேண குண்டு துளைக்காத பேழை

### ஜெயலத் எம். பி. வழங்கினார்

வவுனியா, ஒக். 19

மடுத் தேவாலயத்தில் உள்ள பழைமைவாய்ந்த 'மாதா' சிலையை பேணிப் பாதுகாக்கும் வகையில் குண்டு துளைக்காத கண்ணாடிப் பேழை ஒன்று மன்னார் ஆயர் அதி. வண. இராயப்பு ஜோசப்பிடம் நேற்றுக் கையளிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜெயலத் ஜெயவர்த்தனா இந்தப் பேழையைக் கையளித்தார்.

சிங்கப்பூரில் இருந்து பல இலட்சம் ரூபா செலவில் கொள்வனவு செய்யப்பட்ட இந்தப் பேழை நேற்றுக்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## புலமைப்பரிசில் பரீட்சை

## யாழ்.மாணவரின் பெறுபேறுகள் நாளை மறுதினமே கிடைக்கும்

யாழ்ப்பாணம், ஒக். 19

யாழ் மாவட்டப் பாடசாலைகளின் ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை முடிவுகள் நாளை மறுதினம் வியாழக்கிழமை யாழ்ப்பாணத்தில் வெளியாகும் என்று கல்வித் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்தப் பரீட்சை முடிவுகள் திருகோணமலையில் வைத்து நாளை தபாலில் சேர்க்கப்படும் என்றும்—

நாளை அங்கிருந்து யாழ்ப்பாணம் புறப்படும் செஞ்சிலுவைச் சர்வதேசக்குழுவின் கப்பலில் அவை எடுத்துவரப்பட்டு மறுநாள் வெளியிடப்படும் என்றும்—

அவர் மேலும் தெரிவித்தார்.

(ஐ-3)

## சமவாய்ப்புச் சட்டமூலத்தை அரசு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்காது!

### இறுதி நேரத்தில் பின்வாங்கியது

கொழும்பு, ஒக். 19

பலத்த எதிர்ப்பின் மத்தியில் முன்வைக்கப்பட்டிருக்கும் சமவாய்ப்புச் சட்டமூலத்தை அரசாங்கம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்காது என புதிய சட்டமா அதிபர் கே. ஸி. கமலசபேசன் உயர் நீதிமன்றத்தில் நேற்று அறிவித்தார்.

சமவாய்ப்புச் சட்டமூலத்தை எதிர்த்து வீரவிதான இயக்கம், அரசாங்க தாதிமார் மன்றம் மற்றும் பொது அமைப்புக்கள் தாக்கல் செய்திருந்த 28 முறைப்பாடுகள் உயர் நீதிமன்றத்தில் நேற்றைய தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோதே சட்டமா அதிபர் இத்தகவலை வெளியிட்டார்.

சட்டமா அதிபர் கே. ஸி. கமலசபேசனின் இந்த அறிவிப்பை அடுத்து உயர் நீதிமன்ற நீதியரசர்களான கலாநிதி றஞ்சித் அமரசிங்க, கலா

(10 ஆம் பக்கம் பார்க்க)

## சென்னையில் இருந்து கொழும்புக்கு

## தமிழ் இளைஞர் ரகசியமாக நாடு கடத்தப்பட்டாரா?

### குமார் பொன்னம்பலம் கேள்வி

கொழும்பு, ஒக். 19

நீலன் திருச்செல்வம் கொலைச் சம்பவத்துடன் தொடர்புடையவர் எனச் சந்தேகிக்கப்படும் தமிழ் இளைஞர் ஒருவர் இந்தியாவில்இருந்து ரகசியமாக இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டிருக்கின்றாரா?

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் பொதுச் செயலாளர் குமார் பொன்னம்பலம் இவ்வாறு சந்தேகம் எழுப்பி உள்ளார்.

இது தொடர்பாக அவர் ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள கடிதம் ஒன்றில் சில தகவல்களை வெளியிட்டிருக்கிறார்.

சுன்னாகத்தைச் சேர்ந்த எரிக் செளந்தரநாயகம் என்ற 27 வயதுடைய பிரஸ்தாப இளைஞர் தனதுசகோதரியின் திருமணத்துக்காக சென்னை சென்றிருந்தார்.

திருவாண்மையூரில் கிறிஸ்தவ மதகுரு ஒருவருடன் தங்கியிருந்த சமயம் இந்திய அதி

[10 ஆம் பக்கம் பாாக்க]

## மாங்குளம் ஊடாக வாகன அணி நாளை வன்னிக்குச் செல்லும்?

### தடை நீக்கப்பட்டதாகப் படையினர் அறிவிப்பு

வவுனியா, ஒக், 19

வன்னியில் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளுக்கான — மாங்குளம் ஊடான — போக்குவரத்து மீண்டும் நாளை புதன்கிழமை முதல் ஆரம்பமாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஒலுமடு, அம்பகாமம் பகுதிகளில் திடீரென மூண்ட சண்டையை அடுத்து கடந்த புதன்கிழமை முதல் இந்தப் போக்குவரத்து தடைப்பட்டிருக்கிறது, உணவு வாகன அணி உட்பட அவ்வழியான போக்குவரத்தை படையினர் தடை செய்திருந்தனர்.

பொதுமக்கள் போக்குவரத்துக்கான மாங்குளம் பகுதியில் அமைக்கப்பட்ட யுத்த சூனியப் பிரதேசத்தை அண்டிய பகுதிகளிலும் ஷெல்கள் வீழ்ந்து வெடித்ததை அடுத்து

(10 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுன்னாகம் வர்த்தகர் சங்கம்

## அறிவித்தல்

எதிர்வரும் தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு 23, 24, 30, 31-10-99 6-11 சனி, ஞாயிறு ஆகிய விடுமுறை நாள்களில் முழுநேரமாக சுன்னாகம் வர்த்தக சங்கத்திற்குட்பட்ட கடைகளைத் திறப்பதற்கு அனுமதி அளிப்பதென்று சுன்னாகம் வர்த்தகர் சங்க நிர்வாகம் முடிவு செய்துள்ளது என்பதை அறியத் தருகின்றோம்.

மேலதிக வேலைநாள்களில் ஊழியர்களுக்கு மேலதிக ஊதியம் வழங்கப்படவேண்டும் என்று இத்தால் அறியத்தருகின்றோம்.

சுன்னாகம் வர்த்தகர் சங்கம்.

—செயலாளர். — தலைவர்.

(70102)

---

## விநாயகர் தொலைத் தொடர்புச் சேவை

VINAYAKAR COMMUNICATOIN SERVICE

இன்று முதல்!

உள்நாட்டு, வெளிநாட்டுத் தொலைபேசி அழைப்புக்களை நியாயமானகட்டணத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

தொலைபேசி இலக்கம்:-

உள்நாடு — 021-3319

வெளிநாடு -- 0094213319

உடையார் ஒழுங்கை,
சொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

(70110)

---

# மரண அறிவித்தல்கள்

## நாகலிங்கம் முத்துராசா

நாகலிங்கம் முத்துராசா காலமாகிவிட்டார்.

அன்னார் கொக்குவிலைச் சேர்ந்த நாகலிங்கம் தம்பதிகளின் அன்பு மகனும், இந்திராணி அவர்களின் அருமைக்கணவரும் ,ஜெயபாலா,(இத்தாலி)சுனித்தா (ஜேர்மனி],ஜெயசுதா, டினேஸ் (நல்லூர் பிரதேச சபை), ஜெகாந்தன், ஜெஸ்லிபாலா (கனகரத்தினம் ம.ம. வித்தியாலயம்)ஆகியோரின் பாசமிகு தந்தையும் தனேந்திரகுமார் (இந்திரன்- ஜேர்மனி), தேவராசா (யாழ். ப. நோ. கூ. சங்கம்) பிரதீபா ஆகியோரின் அன்பு மாமனாரும் யதூஸ்சன், யதீஸ்சன், லாவண்யா (ஜேர்மனி), ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இல- 42/2 வேலப்பர் வீதியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று இன்று19-10-99 காலை 10.00 மணிக்கு அரியாலை சித்துப்பாத்தி மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்,

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மு. டினேஸ்

42/2,வேலப்பர் லேன்,
அரியாலை மேற்கு,
யாழ்ப்பாணம்.

(70094)

## திருமதி பொன்னு இலட்சுமி

கோண்டாவில் மேற்கைச் சேர்ந்த திருமதி பொன்னு இலட்சுமி அவர்கள் நேற்று [18-10-99] திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னுவின் அன்புப்பாரியாரும். செல்வரத்தினம், அழகரத்தினம், சிவப்பிரகாசம். விக்கினேஸ்வரன், புஷ்பராணி ஆகியோரின் அன்புத் தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19-10-99) செவ்வாய்க்கிழமை காலை 10.30 மணியளவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
பொ. செல்வரத்தினம்
[மகன்]

கே. கே. எஸ். வீதி,
கோண்டாவில் மேற்கு.

(70081)

## திருமதி அந்தோனிப்பிள்ளை ஞானம்மா

ஈச்சமோட்டையைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி அந்தோனிப்பிள்ளை ஞானம்மா 18 - 10 - 99 அன்று வவுனியாவில் காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற இறப்பியேல்பிள்ளை அந்தோனிப்பிள்ளை அவர்களின் அன்பு மனைவியும் யேசுதாசன் (கொழும்பு), யேசுநேசன் (முன்னாள் யா. மா. ச. உத்தியோகத்தர் — வவுனியா), ஜெயசீலன் (சுகாதாரப்பகுதி யா. மா. சபை) ஆகியோரின் பாசமிகு தாயாரும் பேபி, ஜெயா, றஞ்சினி ஆகியோரின் அன்பு மாமியாரும் தனுசன், செறின், கம்சன், கரோலின், லடிஸ்லஸ், றொபின் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று (19 - 10 - 99) செவ்வாய்க்கிழமை வவுனியாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
R. A. ஜெயசீலன்
(மகன்)

11, குருசோ வீதி,
சுண்டுக்குளி.

(70101)

---

## கண்காட்சி நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஒக் 19

யாழ். பல்கலைக்கழக வெள்ளி விழாவை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள 'வளமும் வளர்ச்சியும்' என்ற தலைப்பிலான கண்காட்சி நாளை புதன்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து மூன்று தினங்கள் இடம்பெறவுள்ளது.

பல்கலைக்கழகத்தின் சகல பீடங்களும் ஒன்றுசேர்ந்து ஒழுங்குசெய்துள்ள இந்தக் கண்காட்சியில் பாடசாலை மாணவர்கள் கலந்துகொண்டு விஞ்ஞானம், தொழில்நுட்பம் கணிதம் மற்றும் புவியியல், அரசியல் பற்றிய பல்வேறு விடயங்கள் பற்றிய விளக்கங்களைப் பெற்றுக் கொள்ளலாம் என துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை தெரிவித்தார்.

(ஐ-7)

---

யாழ்ப்பாணப்
பல்கலைக் கழகம்,
இலங்கை.
1998/ 1999
புதிய கல்வியாண்டுக்கான

## விரிவுரைகள்

கலை/ முகாமைத்துவ கற்கைகளும் வர்த்தகமும்/ விவசாயம்/ மருத்துவம் ஆகிய பீட மாணவர்களுக்கு 1998/99 கல்வி ஆண்டுக்கான விரிவுரைகள் 26-10-1999 இல் ஆரம்பமாகவுள்ளன.

— பதிவாளர்

(சி/9407)

---


## ராஜா

யாழ்ப்பாணம்

இன்று மட்டும்
அர்ஜுன் — குஷ்பு
மற்றும் பலர் நடித்த

**ரோஜாவைக் கிள்ளாதே**

10 30, 2-30

நாளை முதல்

**மேட்டுக்குடி**

(சி/9342)



## லிபேட்டி தியேட்டர்

அச்சுவேலி.

கார்த்திக் — நக்மா
கவுண்டமணி — செந்தில்
மற்றும்பலர் நடித்த

**மேட்டுக்குடி**

காட்சிகள்: 10-30, 2-30
T.P.No. 070-212223

(69879)



## நாகம்ஸ்

சுன்னாகம்

விஜய் -சங்கவி-சுவாதி
நடித்த

**செல்வா**

20 ஆம் திகதி முதல்


**மறுமலர்ச்சி**

காட்சிகள்:
11-00, 2-30, 5-15
(புதிய நேரம்)

([illegible])


---

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



### திருமதி பொன்னர் சின்னம்மா

தோற்றம்: 15-01-1924

மறைவு: 19-09-1999

உங்கள் பிரிவால் துயருறும்
கணவன், பிள்ளைகள்,
மருமக்கள் பேரப்பிள்ளைகள்.

காந்தி ஜீ. சனசமூக நிலையம்,
உரும்பிராய் கிழக்கு.

(70111)

---

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

# வெள்ளிவிழாக்கண்காட்சி

1999 ஒக்ரோபர் 20, 21, 22 ஆம் திகதிகளில்
(காலை 9. 00 மணி — மாலை 4. 00 மணி)

பல்கலைக்கழக கலை, விவசாய, விஞ்ஞான,
மருத்துவ (சித்த மருத்துவம் உட்பட),
முமாமைத்துவ - வர்த்தக, உயர்பட்டப் படிப்புகள்
பீடங்கள் இணைந்து யாழ். பல்கலைக்கழக
வெள்ளி விழாவை முன்னிட்டு

## "வளமும் வளர்ச்சியும்"

என்னும் தொனிப் பொருளில்
கண்ணுக்கும் கருத்துக்கும்
எண்ணத்துக்கும் எதிர்காலத்துக்கும்
ஏற்றதாக வழங்கும்

## மாபெரும் கண்காட்சி!

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நுழைவுச் சீட்டுகளை பல்கலைக்கழக வாயிலில்
பெற்றுக் கொள்ளலாம்.

வெள்ளி விழாக் குழு
யாழ். பல்கலைக்கழகம்.

[சி/9408]

---

# மரண அறிவித்தல்

## இளையதம்பி பரமசாமி

(ஓய்வு பெற்ற நடத்துநர், இ. போ. ச.)

சரசாலை வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி பரமசாமி [ஓய்வு பெற்ற நடத்துநர் இ. போ. ச. ] 18-10-99 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் இராசம்மாவின் அன்புக் கணவரும் செல்வராசா [யாழ். போதனா வைத்தியசாலை], யோகராஜா [உரிமையாளர்,குறிஞ்சி ஜவுளி சமுத்திரம், குறிஞ்சி றேடர்ஸ், சாவகச்சேரி], செல்வராணி, ஜெயராஜா (சுவிஸ்), இந்திராணி ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் மாலினி, சுந்தரலிங்கம் (கணக்காளர், ப. நோ. கூ. சங்கம் சாவகச்சேரி), சந்திரா (சுவிஸ்), பாக்கியநாதன் (ஓய்வு பெற்ற பொலீஸ் உத்தியோகத்தர்) ஆகியோரின் மாமனாரும் ஜனனி, றூபினி (கனடா), மயூரி, காயத்திரி, வினுஷா, ரம்பா (மாணவிகள், சைவ மங்கையர் கழகம், வெள்ளவத்தை), நிவேஜினி, கபில்ராஜ், சரண்யா (மாணவர்கள், றிபேக் கல்லூரி, சாவகச்சேரி), ஆர்த்தி, சந்துரு (சுவிஸ்), சரண்ராஜ், சங்கேதராஜ் (மாணவர்கள், சாவகச்சேரி இந்துக் கல்லூரி), அபிநயா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19-10-99) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3-00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொம்புகுளம் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
ப. யோகராஜா (மகன்)
(குறிஞ்சி ஜவுளி சமுத்திரம், சாவகச்சேரி)

சரசாலை வடக்கு,
சாவகச்சேரி,

(சி/9412)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இந்தியா — பாகிஸ்தான்

# எல்லைக் கட்டுப்பாட்டுப் பகுதியில் இருந்து பாக். படைகள் வெளியேறும்

## ஜெனரல் முஷாரப் மக்களுக்கு உரை

இஸ்லாமாபாத், ஒக். 19

இந்திய—பாகிஸ்தான் எல்லைக் கட்டுப்பாட்டுப் பகுதியில் இருந்து பாகிஸ்தான் தனது படையினரில் கணிசமானோரை ஒரு தலைப்பட்சமாக வாபஸ் பெற்றுக் கொள்ளும். கட்டுப்பாட்டுக் கோட்டுப் பகுதியில் நிலவும் பதற்றத்தைத் தவிர்க்கும் வகையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

பாகிஸ்தானின் இராணுவ ஆட்சியாளர் ஜெனரல் பர்வேஸ் முஷாரப் இவ்வாறு தெரிவித்தார்.

நாவஸ் ஷெரீப் அரசாங்கம் கவிழ்க்கப்பட்டு பாகிஸ்தானில் இராணுவ ஆட்சி ஏற்படுத்தப்பட்டதை அடுத்து நேற்று முன்தினம் ஜெனரல் முஷாரப் நாட்டு மக்களுக்கு தொலைக்காட்சி மூலம் உரையாற்றினார்.

அந்த உரையின் போதே அவர்மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:—

பாகிஸ்தானில் உண்மையான ஜனநாயகத்தை நிலைநாட்டுவதற்கென தேசிய பாதுகாப்புச் சபை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. நாட்டின் சகல அரசியல், பொருளாதார மற்றும் சட்டத் துறை விவகாரங்களை தேசிய பாதுகாப்புச்சபை கவனிக்கும். இந்தச் சபையின் பிரதம நிறைவேற்று அதிகாரியாக நான் பணியாற்றுவேன்.

தேசிய பாதுகாப்புச் சபை ஏற்படுத்தும் வழிகாட்டும் நெறிகளின் படி செயற்பட அமைச்சரவை ஒன்று நியமிக்கப்படும். தேசிய பாதுகாப்புச் சபையின் உறுப்பினர்களாக கடற்படை, விமானப் படைத் தலைவர்களும், பொருளாதாரம், சட்டம், வெளியுறவு மற்றும் தேசிய விவகாரத்துறை வல்லுநர்களும் செயற்படுவார்கள்.

பாகிஸ்தானின் நான்கு மாநிலங்களிலும் சிவில் நிர்வாக அதிகாரிகளின் துணையுடன் ஆளுநர்களின் ஆட்சி நடைபெறும்.

நாட்டில் தற்போது நடைபெறுவது இராணுவ ஆட்சி அல்ல. ஜனநாயகத்தை நோக்கிச் செல்லும் ஒரு பாதையே இது. நாட்டில் ஜனநாயகம் ஏற்படுத்தப் படும்வரை இராணுவம் நிர்வாகப் பொறுப்புக்களை ஏற்றிருக்கும்.

இப்படி அவர் மேலும் தெரிவித்தார். (இ-6-9)

### பாக். இராணுவ ஆட்சியாளர்

# ஜெனரல் முஷாரப்பை கொல்லச் சதி: நவாஸ் ஷெரிப் மீது விசாரணை

பாகிஸ்தானின் இராணுவ ஆட்சியாளரும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் பர்வேஸ் முஷாரப்பை கொலை செய்வதற்கு சதி செய்ததாக பதவி கவிழ்க்கப்பட்ட பிரதமர் நவாஸ் ஷெரிப் மீதும் அவரது ஆதரவாளர்கள் மீதும் இராணுவ ஆட்சியாளர்களால் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பான விசாரணைகள் உடனடியாக நடத்தப்பட்டு தண்டனைகள் விரைவிலேயே அளிக்கப்படும் என இஸ்லாமாபாத் செய்திகள் தெரிவிக்கின்றன.

சம்பவம் தொடர்பாக தெரிவிக்கப்படுவதாவது:-

இலங்கை இராணுவ பொன் விழாக் கொண்டாட்டங்களில் கலந்து கொண்டு விட்டுநாடுதிரும்பிய முஷாரப் பின் விமானம் கராச்சிவிமான நிலையத்தில் தரை இறங்குவதற்கு அனுமதி மறுக்கப்பட்டது அப்போது விமானத்தில் 200 பயணிகள் இருந்தனர்.

இராணுவத் தளபதி விமானத்தில் வந்து கொண்டிருந்த போதே அவரை பதவி நீக்கம் செய்யும் உத்தரவை நவாஸ் ஷெரிப் வழங்கினார்.

விமானம் தரை இறங்குவதற்கான அனுமதி தர மறுத்த அதிகாரிகள் விமானத்தை இந்தியாவின் அஹமதாபாத் விமான நிலையத்தில் தரை இறங்குமாறு தெரிவித்தனர்.

இதை அடுத்து விமானியின் கட்டுப்பாட்டு அறைக்குள் நுழைந்த இராணுவத் தளபதி அங்கிருந்து காராச்சி நகர இராணுவத் தளபதியுடன் தொடர்பு கொண்டார். உடனடியாக கராச்சி விமான நிலையத்தை அவரது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருமாறு முஷாரப் விமானத்தில் இருந்தபடி கட்டளை இட்டார்.

அதன்படி இராணுவம் விமான நிலையத்தை தனது கட்டுப்பாட்டின் கீழ்கொண்டு வந்தது. அதன் பின்னரே விமானம் தரை இறங்கியது. அதுவரை — ஒன்றரை மணி நேரம் —விமானம் வானில் பறந்து கொண்டிருந்தது. விமானம் தரை இறங்கிய போது அதில் மேலும் 7 நிமிடங்கள் பறப்பதற்கான எரிபொருள் மட்டுமே எஞ்சியிருந்தது.

தரை இறங்கிய பின் தனது இராணுவ அதிகாரிகளின் உதவியுடன் இராணுவ ஆட்சியை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளில் அவர் இறங்கினார்.

விமானத்தை தரை இறங்க விடாது விமானத்தில் வைத்தே இராணுவத் தளபதியை கொல்லத் திட்டமிட்டதாக நவாஸ் ஷெரிப் மீதும் உளவு அமைப்பான ஐ.எஸ்.ஐ யின் முன்னாள் தலைவர் லெப்டினன்ட் ஜெனரல் ஜியாவுதீன் பட் உட்பட பலர் மீதும் குற்றம் சாட்டப் பட்டுள்ளது. (இ-6)

# இந்தியாவுடன் பேச பாகிஸ்தான் தயார்

## இராணுவ ஆட்சியாளர் தெரிவிப்பு

காஷ்மீர் பிரச்சனை உட்பட அனைத்து இரு தரப்புப் பிரச்சினைகள் குறித்தும் நிபந்தனைகள் எதுவும் இன்றி இந்தியாவுடன் பேசுவதற்கு பாகிஸ்தான் தயார் என பாகிஸ்தான் இராணுவ ஆட்சியாளர் ஜெனரல் முஷாரப் அறிவித்துள்ளார்.

பாகிஸ்தானில் இராணுவ ஆட்சி ஏற்படுத்தப்பட்டு 5 நாள்களின் பின் நேற்று முன்தினம் இரண்டாவது தடவையாக தொலைக்காட்சி மூலம் நாட்டு மக்களுக்கு உரையாற்றும் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்தியாவின் புதிய பிரதமரான வாஜ்பாய்க்கு வாழ்த்துத் தெரிவித்த முஷாரப் பயன்தரக் கூடிய கட்டுப்பாடுகளற்ற பேச்சுக்களை நடத்த இந்தியா முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

உலகின் புதிய அணு ஆயுத நாடுகளான இந்தியாவும், பாகிஸ்தானும் பிராந்தியத்தின் பாதுகாப்பையும் அமைதியையும் உறுதிப்படுத்துவதற்கான செயற்பாடுகளை ஒன்றிணைந்து மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். (இ-6-9)

### பாகிஸ்தானுடன்

# பேச்சை ஆரம்பிக்க அங்கு சுமுகமான சூழல் தேவை

## பாதுகாப்பு ஆலோசகர் கூறுகிறார்

பாகிஸ்தானுடன் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு அங்கு சுமுகமான சூழல் நிலவுவது அவசியம் என்று இந்தியப் பிரதமர் வாஜ்பாயின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் மிர்தேஷ் மிஷ்ரா தெரிவித்தார்,

இந்தியாவுடன் பேச பாகிஸ்தான் தயார் என ஜெனரல் முஷாரப் கூறியது தொடர்பாக கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைக் கூறினார்.

எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டுப் பகுதியில் பாகிஸ்தான் இராணுவத்தின் ஆதரவுடன் தொடர்ந்து தீவிரவாதச் செயல்கள் இடம் பெற்று வருகின்றன.

காஷ்மீரிலும் நாட்டின் இதர பகுதிகளிலும் பாகிஸ்தான் ஆதரவுடனான தீவிரவாதச் செயல்களால் அப்பாவிப் பொது மக்கள் பலியாகி வரும் போது ஆக்கபூர்வமான பேச்சுக்கள் எவ்வாறு நடைபெறும்?

இந்தியாவும் பாகிஸ்தானும் கட்டுப்பாட்டு எல்லையில் இருந்து தத்தமது படைகளை விலக்கிக் கொள்ள முன்னரே இணங்கி இருந்தன. ஆனால் பாகிஸ்தான் அதனைநிறைவேற்றவில்லை. தற்போது எல்லையில் இருந்து படைவாபஸ் பெறப்படும் என அறிவித்துள்ளது என்று அவர் மேலும் கூறினார். [இ-6-9]

# எய்ட்ஸ் நோய்க் கிருமியின் தொற்று இளம் வயதினரிடையேயே அதிகம்

## ஐ. நா. அறிக்கையில் தெரிவிப்பு

நியூயோர்க், ஒக். 19

உலகில் எய்ட்ஸ் கிருமியான எச். ஐ. வியின் தொற்றுக்குள்ளானவர்களில் அரைவாசிக்கும் அதிகமானோர் மிக இளம் வயதினர் என்று ஐ. நா. மக்கள் தொகை நிதியம் வெளியிட்ட ஆய்வு அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

15 முதல் 24 வயதுக்கு உட்பட்ட இளவயதினரே அதிகம் எச். ஐ. வி. தொற்றுக்கு உள்ளாகின்றனர். இவர்களில் இளம் பெண்களே மிக அதிகமாக இந்த நோய்த்தொற்றுக்குள்ளாகின்றார்கள் என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

பணவசதி படைத்த சிறுவர்களை விட தெருவோரச் சிறுவர்களையே இந்த நோய் அதிகம் பீடிக்கின்றது என்றும் அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளது. [இ-6]

# 40 அடி நீளமான திமிங்கிலம் கரை ஒதுங்கியது

புதுடில்லி, ஒக். 19

இந்தியாவின் கர்நாடக மாநில பக்தார் கடற்கரையோரமாக 40 அடி நீளமான திமிங்கிலம் ஒன்று நேற்று இறந்த நிலையில் கரையொதுங்கியது.

இந்தத் திமிங்கிலகத்தின் நிறை சுமார் 15 தொன் எனத் தெரிவிக்கப்பட்டது

பொதுவாக அட்லான்டிக் மற்றும் பசுபிக் சமுத்திரங்களின் மிக ஆழமான பகுதிகளிலேயே இந்த வகைத் திமிங்கிலங்கள் வாழும். எவ்வாறு இந்தியக் கரையோரப் பகுதியில் இந்தத் திமிங்கிலம் கரை ஒதுங்கியது என்று தெரியவில்லை என இந்திய கடல்வள ஆராய்ச்சி மைய அதிகாரிகள் தெரிவித்தனர். (இ)

### உலக அரங்கில்

# அமெரிக்கா கோரிக்கை

வாஷிங்ரன், ஒக், 19

பாகிஸ்தானில் ஜனநாயக ஆட்சி எப்போது ஏற்படுத்தப்படும் என்பதை பாகிஸ்தான் இராணுவ ஆட்சியாளர்கள் தெளிவாகத்தெரிவிக்க வேண்டும் என அமெரிக்கா கோரி உள்ளது.

நேற்று முன்தினம் ஜெனரல் முஷராப் தொலைக் காட்சியில் உரையாற்றிய போது மக்கள்பிரதிநிதிகள் அடங்கிய காபந்து அரசு அமைப்பது குறித்த அறிவிப்பார் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் நாட்டில் விரைவில் ஜனநாயகம்ஏற்படுத்தப்படும் என மட்டுமே அவர் தெரிவித்திருத்தார்.

இதனைஅடுத்தே அமெரிக்கா இவ்வாறு கோரி உள்ளது. ஜனநாயக ஆட்சி எப்போது ஏற்படுத்தப்படும் என்பது தொடர்பான கால அட்டவணை ஒன்றையும் பாகிஸ்தான் வெளியிட வேண்டும் எனவும் அமெரிக்கா கேட்டுள்ளது. [ஐ-6]

### செச்சின்யாவில்

# முதல் கட்ட இராணுவ நடவடிக்கை பூர்த்தி

செச்சின்யா மீது ரஷ்யப் படைகள் மேற் கொண்டு வந்த தாக்குதல்களின் முதல் கட்டம் நிறைவடைந்து விட்டது என செச்சின்யாவில் உள்ள ரஷ்யப் படைகளின் தளபதி தெரிவித்துள்ளார்.

ரஷ்யாவில் இடம் பெற்ற தொடர் குண்டு வெடிப்புக்களுக்கு காரணமானவர்கள் செச்சின்யாவில் மறைந்து உள்ளனர் எனத் தெரிவித்து கடந்த மாதம் செச்சின்யா மீது ரஷ்யா தாக்குதல் நடத்த ஆரம்பித்தது.

செச்சின்யப் பகுதிகளுககுள் தொடர்ந்து முன்னேறி வரும் ரஷ்யப் படைகள் தலைநகர் குறோஸ்னியை அண்மித்துள்ளன. இந்த நிலையில் தமது இராணுவ நடவடிக்கையின் முதல் கட்டம், முடிவடைந்ததாக ரஷ்யத் தளபதி அறிவித்துள்ளார்.

எனினும் தலைநகர் குறோஸ்னி மீது ரஷ்ய விமானங்கள் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகின்றன. ஆட்லறித் தாக்குதல்களும் நடத்தப்பட்டு வருகின்றன

செச்சின்யாவில் இருந்து தீவிரவாதிகள் முற்றாக ஒழிக்கப்படும் வரை தாக்குதல்கள் தொடரும் என ரஷ்யா அறிவித்துள்ளது.

ஆனால் செச்சின்யாவில் சண்டையை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக ரஷ்யாவுடன் பேச்சு நடத்தத்தயார் என செச்சின்ய பிரதமர் தெரிவித்துள்ளார். [இ-6]

# பாகிஸ்தானில் இராணுவ ஆட்சி வலுவாகின்றது

இஸ்லாமாபாத், ஒக். 1

பாகிஸ்தானில் நவாஸ் ஷெரிப் அரசாங்கம் கவிழ்க்கப்பட்டு அங்கு இராணுவ ஆட்சி ஏற்படுத்தப்பட்டதை அடுத்து இராணுவத்தினர் தமது ஆட்சியைப் பலப்படுத்தும் நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை முதல் நாட்டில் அவசர காலச் சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. நாட்டின் நிறைவேற்று அதிகாரியாக தன்னைப் பிரகடனப்படுத்தி உள்ள ஜெனரல் பர்வேஸ் முஷாரப் நாட்டின் அரசமைப்பு தடை செய்யப்பட்டுள்ளதாகவும் அறிவித்துள்ளார்.

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டுள்ளது நவாஸ் ஷெரிபின் அரசாங்கத்தால் வெளிநாட்டுத் தூதர்களாக நியமிக்கப்பட்ட 18 தூதர்கள் பதவி நீக்கப்பட்டுள்ளனர்.

ஆனால் பாகிஸ்தானின் ஜனாதிபதியாக முகம்மட் ராபீக் தர்வார் தொடர்ந்து மக்களுக்கு சேவையாற்றுவார் என்று ஜெனரல் முஷாரப் கூறியுள்ளார்.

இராணுவஆட்சிகுறித்தோ அல்லது தனது ஆட்சியின் கீழுள்ள அதிகாரிகளையோ விசாரணை செய்யும் அதிகாரம் பாகிஸ்தான் உச்ச நீதிமன்றத்துக்கு இல்லை என்றும்—

அவர் மேலும் தெரிவித்தார். [ஐ-6]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## கண்டெடுக்கப்பட்டுள்ளது

கலட்டிச்சந்திக்கும் நாச்சிமார் கோயிலுக்கும் இடையில் இராமநாதன் வீதியில் ஒரு தொகைப்பணம் கண்டெடுக்கப்பட்டு கலட்டிக் கண்ணனின் பலசரக்குக் கடையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் தகுந்த ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளவும். இல. 77/58 இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம். [70038]

## ஜோதிடம்

இணையற்ற அதிர்ஷ்டம் வேண்டுமா? கிரகதோஷங்களுக்கான பரிகாரம் காணப்படும். நீங்கள் உங்கள் ஜாதக பலன்களை இங்கே வந்து பாருங்கள். இல. 304, ஆலடிச் சந்தி, கந்தர்மடம். யாழ்ப்பாணம். [69959]

## கைமாறிவிட்டது

12—10—99 செவ்வாய்க்கிழமை அன்று உரும்பிராய் அரசினர் வைத்தியசாலையில் ஆண்களுக்கான சைக்கிள் ஒன்று தவறுதலாக கைமாறி விட்டது. கைமாற்றியவர்கள் தயவுசெய்து ஊரெழு பிள்ளையார் கோயில் முன் உள்ள சைக்கிள் திருத்துமிடத்தில் திருப்பிக் கொடுத்து மாற்றி உதவவும். (70063)

## பிறிமா குஞ்சுகள்

கொழும்பு பிறிமா Hi-Line சிவப்பு பேட்டுக்குஞ்சுகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: வை. சிவகுமார், நாவலர் வீதி, (அரவிந் வீடியோ அருகில்) அத்தியடி, யாழ்ப்பாணம். (70057)

## ஆலயத்துக்கு கண்டாமணி

யாழ்ப்பாணம், ஒக். 19

இணுவில் கந்தசாமி ஆலயத்துக்கு என லண்டனில் இருந்து தருவிக்கப்பட்ட சுமார் 15 லட்சம் ரூபா பெறுமதியான கண்டாமணி இன்று காலை 11 மணிக்கு இணுவில் சந்தியில் இருந்து ஆலயத்துக்கு ஊர்வலமாக எடுத்துச் சொல்லப்படும். (க)

## திறப்பு விழா

யாழ்ப்பாணம், ஒக். 19

அராலி சரஸ்வதிமகாவித்தியாலயத்தின் தரம் ஒன்று வகுப்பறைக் கட்டடத்திறப்பு விழாவும் வாணி விழாவும் இன்று காலை 10 மணிக்கு அதிபர் திருமதி கோ. அம்பலவாணர் தலைமையில் நடைபெறவுள்ளன,

இந்த நிகழ்வில் வலிகாமம் கல்வி வலய கல்வி நிர்வாக உதவிக் கல்விப் பணிப்பாளர் கா. சந்திரபாலன் பிரதம விருந்தினராகவும் சங்கானைக் கல்விக் கோட்ட உதவிக் கல்விப்பணிப்பாளர் சி. செல்லையா, வலிகாமம் கல்வி வலய கல்வி முகாமைத்துவ உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ். சுந்தரசிவம் ஆகியோர் விருந்தினர்களாவும் கலந்து கொள்வர், [க]

## கோட்டக் கல்விப் பணிமனை

நெடுந்தீவு, ஒக். 19

நெடுந்தீவு கோட்டக்கல்விப் பணிமனை நெடுந்தீவு மகா வித்தியாலயத்தின் ஒருபகுதியில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

கோட்டக்கல்வி அதிகாரி க. அரசரத்தினம் தலைமையில் நடைபெற்ற திறப்புவிழா நிகழ்ச்சியில் கலந்து கொண்ட தீவக வலய கல்விப்பணிப்பாளர் ப. விக்னேஸ்வரன் பணிமனையைத் திறந்து வைத்தார். (ஐ111)

---

# மங்களகரமான ஆரம்பம்

## பராசக்தி என்ரபிறைஸ்

### தொலைத் தொடர்பகம்

**19 - 10 - 1999** விஜயதசமியன்று

நண்பகல் **12.00** மணிக்கு ஆரம்பம்

சங்கத்தானை பாலா தட்டச்சு நிலையத்தின்

மற்றுமோர் சேவை

தொலைபேசி இல. உள்ளூர்: 070 - 212545

சர்வதேசம்: 0094 70212545

**பராசக்தி என்ரபிறைஸ்**

தொலைத் தொடர்பகம்

கண்டிவீதி, சங்கத்தானை, சாவகச்சேரி.

(சி/9402)

---

## யா/ யாழ். இந்து மகளிர் கல்லூரி

# ஆண்டு 6 அனுமதி - 2000

மேற்படி அனுமதிக்கான விண்ணப்பப் படிவங்களை 25 - 10 - 99 தொடக்கம் கல்லூரி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவு திகதி: 15 – 11 – 99

- அதிபர்

(70091)

---

# கோபி தொலைத் தொடர்பு

நுணாவில் பகுதி மக்களின் உள்ளூர், வெளியூர் தொலைத் தொடர்புகளை உடனுக்குடன் பெற்றுக் கொள்ள நாடுங்கள்

[இரவு பகல் சேவை]

வெளியூர் அழைப்புகள் உரியவர்களுக்கு அறிவிக்கப்படும்

## கோபி தொலைத் தொடர்பு

நுணாவில் மத்தி, சாவகச்சேரி.

தொலைபேசி எண்:

கேபிள்: 2226

சர்வதேசம்: 0094 212258–2226

உள்ளூர்: 070 – 212595

வெளியூர்: 0094 70 212595

[சி/9403]

---

# கண்ணீர் அஞ்சலி

## அமரர் கனகர் சுப்பிரமணியம்

எமது முன்னாள் ஊழியர் அவர்கள் மரணம் அடைந்ததையிட்டு அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

MERCANTILE SECURITY SERVICE
JAFFNA.

(70095)

---

# கண்ணீர் அஞ்சலி

தென்புலோலி, வெள்ளுருவை நின்ற அத்தாய், மூச்சன்புலோ ஆகிய ஆலயங்களில் முறையே பெரிய புராணம், திருவிளையாடற் புராணம் ஆகியனநிகழ்ந்த காலங்களில் பெருந்தொண்டு ஆற்றிய

## கணபதிப்பிள்ளை பத்மநாதன்

அவர்களின் திடீர் மறைவுச் செய்தி கேட்டுச் சொல்லொணாத துயர் அடைகின்றோம். நாம் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

சே. ஏகாம்பரநாதன்,
சி. கணபதிப்பிள்ளை,
வே வீரபத்திரபிள்ளை,
வீ. க. [illegible]

புலோலி, (70079)

---

இன்று முதல்

# மங்களகரமான ஆரம்பம்

## திருவருள்

### தொலைத் தொடர்பு சேவை

பருத்தித்துறை தபாற் கந்தோருக்கு அண்மையில் குகன் ஸ்ருடியோவுக்கு முன்பாக அமைதியான சூழலில்

**2 ஆம் குறுக்குத்தெரு, பருத்தித்துறை.**

19-10-1999 இன்று விஜய தசமி

எமது தொலைத் தொடர்பு சேவையை காலை 10 மணிக்கு ஆரம்பிக்கவுள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம்.

நன்றி.

இரவு பகல் சேவை

உள்நாடு: T. P. No. 070 – 212582

வெளிநாடு: T. P. No. 0094 – 70 212582

[சி/9401]

---

# வெளிவந்துவிட்டது

## க.பொ.த. உயர்தர (A/L) பௌதிகவியல்

ஆசிரியர் S. வர்ணகுலசிங்கம் (வர்ணம்)

{பொறியியல்
சடப்பொருளின் இயல்புகள்}

{மின்புலம், ஈர்ப்புப்புலம்
காந்தப்புலம். ஓட்டமின்னியல்}

கிடைக்கும் இடம் **கமலா புத்தகசாலை**

பிரதான வீதி, பருத்தித்துறை.

(பஸ் டிப்போவுக்கு சமீபமாக)

(70052)

---

# கதிரிப்பாய் சுப்பறாங்

## தொலைத் தொடர்பு நிலையம்

கதிரிப்பாய், அச்சுவேலி.

இன்று முதல் இப்பகுதி மக்களுக்கென

உள்ளூர் வெளிநாட்டு தொடர்புகளுக்கு 24 மணிநேர சேவையினை ஆரம்பிக்கின்றது.

தொடர்புகளுக்கு:

உள்ளூர் தொ. பே. இல. 070 -- 212553

வெளியூர் தொ. பே. இல, 0094 -- 70212553

(70098)

---

# கண்ணீர் அஞ்சலி

## நா. முத்துராசா

எமது கல்லூரி உயர்தரவகுப்பு மாணவனாகிய

**மு. ஜெஸ்லிபாலாவின்**

தந்தையாரின் பிரிவு குறித்து எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

2001 கலைப்பிரிவு மாணவர்கள்,
யா/ கனகரத்தினம்
மத்திய மகா வித்தியாலயம்.

(70100)

---

# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் முன்னாள் ஆசிரியரும், பிரிவுத் தலைவருமாகிய

## ஆ. கமலநாதன்

(உதவிக் கல்விப்பணிப்பாளர், வலிகாமம் வலயம்)

அவர்கள் இறையடி சேர்ந்ததையிட்டு எமது அனுதாபத்தை அன்னாரின் குடும்பத்தவருக்கு தெரிவிப்பதுடன் எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாகச் செலுத்துகின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்

யா/ ஆனைக்கோட்டை றோ. க. த க. பாடசாலை,
ஆனைக்கோட்டை. (70090)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயிரத்து 200 விவசாயிகளுக்கு

# மரக்கறி விதைகள் கிடைக்கும்

யாழ்ப்பாணம், ஒக். 19 உணவு விவசாய நிறுவனத்தினால் மேலும் ஆயிரத்து 200 விவசாயப் பயனாளிகளுக்கு மரக்கறி விதைகளும் விவசாய உபகரணங்களும் வழங்கப்படவுள்ளன.

பிரதேச செயலர் பிரிவு ரீதியாக விதைகள் வழங்கத் தெரிவு செய்யப்பட்ட விவசாயப் பயனாளிகளின் விவரம் வருமாறு:-

தெல்லிப்பழை —100, சங்கானை —200, சண்டிலிப்பாய் —150, உடுவில்-150, கோப்பாய்-150, பருத்தித்துறை —100, கரவெட்டி- 59, மருதங்கேணி—50, சாவகச்சேரி-50. நல்லூர் — 50, வேலணை-50, ஊர்காவற்றுறை — 100.

உணவு விவசாய நிறுவனத்தினால் ஏற்கனவே யாழ். மாவட்டத்தில் இரண்டாயிரம் விவசாயப் பயனாளிகளுக்கு உதவிப் பொருள்கள் வழங்கப்பட்டிருப்பது தெரிந்ததே.

(ஐ-5)

## நடுகைக்குத் தயாராக தென்னம் நாற்றுக்கள்

யாழ்ப்பாணம், ஒக்.19 கமநல சேவைகள் திணைக்களத்தினால் 29 ஆயிரம் தென்னம் விதைகள் நாற்று மேடைகளில் போடப்பட்டுள்ளதாகவும் இவற்றில் 80 வீதம் முளைத்துவிட்டதாகவும் கமநல சேவைகள் உதவி ஆணையாளர் எஸ். சுந்தரேசன் தெரிவித்தார்.

மேலும் 15 ஆயிரம் உள்ளூர் தென்னம் நாற்றுகள் போடப்பட்டுள்ளதாகவும் இவற்றில் 60 வீதம் முளைத்துள்ளதாகவும் அவர் கூறினார். [ஐ - 5]

## பஸ் ஊழியர்களுக்கு இடர்க் கொடுப்பனவு

### இரு கட்டங்களில் கிடைக்கும்

யாழ்ப்பாணம், ஒக். 19 வடபிராந்திய போக்குவரத்துச்சபை ஊழியர்களுக்கு 1998 ஆம் ஆண்டுக்கான இடர்காலக் கொடுப்பனவுகள் இரண்டு கட்டங்களாக வழங்கப்படவுள்ளன.

முதற்கட்ட கொடுப்பனவு நவம்பர் மாதத்திலும் இரண்டாம் கட்டக் கொடுப்பனவு ஜனவரி மாதத்திலும் வழங்கப்படும் என்று போக்குவரத்துச் சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

போக்குவரத்துச்சபை ஊழியர்களின் சம்பளத்தில் பன்னிரண்டரை வீதம் இடர்காலக்கொடுப்பனவாக வழங்கப்படவுள்ளது. [ஐ-5]

## கௌரிவிரதம்

கொழும்புத்துறை, ஒக். 19 யாழ். குடாநாட்டில் உள்ள பெரும்பாலான ஆலயங்களில் இன்று செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணியளவில் கேதாரகௌரி விரத பூசைகள் ஆரம்பமாகி நடைபெறவுள்ளன.

நோன்பு, கௌரிக்காப்பு கேதார விரதம் பூர்த்தி என்பன எதிர்வரும் நவம்பர் மாதம் 8 ஆம் திகதியுடன் நிறைவு பெறும்.

(க-30)

# நிவாரணம் வழங்குவதுடன் மட்டும் கூ. சங்கப் பணி நின்றுவிடக் கூடாது

### கட்டடத் திறப்பு விழாவில் அரச அதிபர் உரை

நிவாரணம் வழங்குவதுடன் மட்டும் கூட்டுறவுச் சங்கங்களின் பணி நின்றுவிடக்கூடாது. சகலப.நோ.கூ. சங்கங்களும் தாபன ரீதியாக இணைந்து இந்தப் பிரதேசத்தில் பொருளாதார வளங்களைக் கட்டியெழுப்புவதன் மூலம் மக்களுக்கான சேவையை சிறப்பாக வழங்க முடியும்.

புனரமைப்புச் செய்யப்பட்ட யாழ். ப. நோ. கூ. சங்கத்தின் நடுவப்பணிமனையைத் திறந்து வைத்துப் பேசிய யாழ். அரசாங்க அதிபர் க. சண்முகநாதன் இவ்வாறு தெரிவித்தார்.

சங்கத்தின் தலைவர் சி. வீ. கே. சிவஞானம் தலைமையில் திறப்பு விழா நடைபெற்றது.

இலங்கையில் கூட்டுறவுத் துறையின் வளர்ச்சிக்கு வித்திட்டவர்கள் நம்மவர்கள். நிவாரணப் பொருள்கள் வழங்குவதுடன் மட்டும் ப. நோ. கூ. சங்கங்கள் நின்றுவிடக் கூடாது. மக்களுக்கு தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்— என்று அரச அதிபர் தனது உரையில் மேலும் தெரிவித்தார்.

கூட்டுறவு அபிவிருத்தி உதவிஆணையாளர் எஸ்.கே. சண்முகநாதன் உரையாற்றும் போது கூறியதாவது:-

கடந்த 12 வருடங்களாக தொல்லியல் சின்னம் போன்று காட்சியளித்த இந்தக் கட்டடம் இன்று மெருகூட்டப்பட்டுள்ளது. இதே போன்று வீரசிங்கம் மண்டபமும் புனரமைக்கப்பட்டு வருகிறது.

கூட்டுறவுத்துறையில் யாழ். மாவட்டத்தில் 25 சதவீத மானவர்களே இணைந்துள்ளனர். ஏனையவர்கள் பார்வையாளர்களாகவே இருக்கின்றனர். எனவே கூட்டுறவுத் துறையில் சகலரும் பங்காளிகளாக மாறவேண்டும்.

யுத்தம் மற்றும் இடப்பெயர்வுகளினால் யாழ். மாவட்டத்தில் கூட்டுறவுத் துறைக்கு பெரும் அழிவுகள் ஏற்பட்ட போதும் நாம் வெட்ட வெட்டத் தழைத்து வருகின்றோம்— என்று அவர் கூறினார்.

யாழ். பல்கலைக்கழக பதிவாளர் கலாநிதி க. குணராசா பேசும் போது கூறியதாவது:-

யாழ். நகரின் மையப் பகுதியாக விளங்கிய முற்றவெளி இன்று ஒரு மயானப் பிரதேசமாக்கப்பட்டுள்ளது. முற்றவெளி மீண்டும் தனது பாரம்பரியத்தை நிலைநாட்டும் வகையில் இன்று இந்தக் கட்டடம் மீண்டும் எழுந்துள்ளது. அதன் பாரம்பரியம் மீண்டும் நிலைநாட்டப்பட வேண்டும்.

மாநகர சபையின் ஆணையாளராக இருந்து இந்த நகரத்தை அழகுபடுத்திய பெருமை சிவஞானம் அவர்களுக்கு உண்டு. இந்தக் கட்டடத்தை மீண்டும் புனரமைத்த அர்ப்பணிப்போடு கூடியஅவரது பணி இதுவாகும். தாஜ்மகாலைக் கட்டிய சிற்பியின் பெயர் அதில் பொறிக்கப்படவில்லை. இந்தக் கட்டடத்தில் பொறியியலாளரின் பெயர் குறிக்கப்பட்டுள்ளது மகிழ்ச்சியளிக்கிறது. நகரின் மத்தியில் நிகழ்ச்சிகளை நடத்தக் கூடியதாக மண்டபம் உள்ளது வரவேற்கத்தக்கது என்றார்.

நல்லல ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள் தமது ஆசியுரையில் கூறியதாவது:-

இன்று யாழ்பபாண மக்களுக்கு ஒரு பொன்னாள். மக்கள் சேவைக்கென புதிய கட்டடம் திறக்கப்படுகிறது. கடந்த நாள்களில் இந்தக் கட்டடத்தின் நிலையைப் பார்த்து ஏங்கியதை, கலங்கியதை நினைக்கின்றோம்- அழிந்துகிடக்கும் இதுபோன்ற ஏனைய கட்டடங்களும் புனரமைக்கப்படவேண்டும். கூட்டுறவின் மூலம் வாழலாம்; வாழ வழி சொல்லலாம் என்பதை உணர்த்தும் வகையில் இந்த நிறுவனம் மக்களுக்குத் தொண்டாற்றுகின்றது. குடாநாட்டு மக்களுக்கு நல்ல பணியை ஆற்ற வேண்டும் என்ற செய்தி இக் கட்டடத்தின் ஊடாகச் சொல்லப்படுகிறது பல நோ. கூ. சங்கத்தின்செயற்பாடுகள் சிறப்பாக அமைய இறைவன் ஆசிர்வதிப்பாராக என்று தெரிவித்தார்.

யாழ்.ஆயர் இல்லக்குரவரான அருட்திரு. செல்வராசா அடிகள் பேசும் போது கூறியதாவது:-

எல்லோருக்கும் எல்லாம் கிடைக்க வேண்டும் என்று பணி புரியும் தாபனம் எல்லோரது தேவைகளையும் பூர்த்தி செய்யும் நிலையமாக இது அமைய வேண்டும். சகல துறைகளிலும் வளர்ந்து இடையூறுகளுக்கு மத்தியிலும் சேவை செய்யக்கூடியதாக மக்களின் நம்பிக்கையைப் பெற்ற நிறுவனமாகஇது எதிர்காலத்தில் மிளிர இறைவன் ஆசீர்வதிக்க வேண்டும் என யாழ். ஆயர் சார்பாகப் பிரார்த்திக்கின்றேன்—என்றார்

திட்டப்பணிப்பாளர் எஸ். மகாலிங்கம், நல்லூர் ப. நோ. கூ. சங்கத் தலைவர் கே. கனகசபாபதி, பொதுமுகாமையாளர் எஸ். சிவபபிரகாசம் கூட்டுறவு உதவி ஆணையாளர் (கணக்குப்பகுதி) திருமதி கோ. திருநாவுக்கரசு, உபதலைவர் யேக்கப் உட்பட பலர் உரையாற்றினர்.

முன்னதாக கூட்டுறவுக் கொடியை உதவிக் கூட்டுறவு ஆணையாளர் சண்முகநாதன் ஏற்றி வைத்தார். அதைத் தொடர்ந்து புனரமைக்கப்பட்ட கட்டடத்தையாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் கே. சண்முகநாதன் திறந்து வைத்தார்.

கட்டட நிர்மாணப் பொறியியலாளர் கே. கைலாசபதிக்கு அரசாங்க அதிபர் சண்முகநாதன் பொன்னாடை போர்த்தார். உதவிக் கூட்டுறவு ஆணையாளர் எஸ். சண்முகநாதன் தங்கச் சங்கிலி அணிவித்தார்.

இயக்குநர் சபை உறுப்பினர் [illegible]

# உள்ளூராட்சி நிறுவனங்கள் வரவு செலவுத் திட்டம் தயாரிப்பு

வலி. தென்மேற்கு. ஒக். 18 யாழ். மாவட்டத்தில் உள்ள பிரதேச சபைகள் நகர சபைகள் ஆகிய உள்ளூராட்சி நிறுவனங்கள் 2 ஆயிரம் ஆண்டுக்கான வரவு – செலவு திட்டங்களைத் தயாரித்துள்ளன.

வருமான மதிப்பீடுகளை 1999 செப்ரெம்பர் மாதம் வரையிலான 9 மாதத்தின் உண்மையான அறவீட்டின் 1.33 வீத பங்கை ஆண்டு வருமானமாக மதிப்பீடு செய்து வரவு செலவுத்திட்டத்தைதயாரிக்குமாறு பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ஆலோசனை வழங்கி உள்ளார்.

(ஐ-185)

## மோசமான வீதி

வலி. வடக்கு. ஒக் 19 சுன்னாகம் இராணுவ முகாமின் பின்புறமுள்ள செல்லாச்சி அம்மையார் வீதி சேறும் சகதியும் நிறைந்து காணப்படுகின்றது.

இரவு 7 மணிக்குப் பின்னர் இந்த வீதியையே காங்கேசன் துறை வீதி வழியாகச் செல்லும் வாகனங்கள் பயன்படுத்தி வருகின்றன.

இந்த வீதி மழை பெய்ததைத் தொடர்ந்து குண்டும் குழியுமாகக் காணப்படுவதுடன் வெள்ளமும் வீதியில் தேங்கி நிற்கின்றது.

மின்சார வசதி கூட இல்லாத இந்த வீதியால் இரவு நேரங்களில் பயணம் செய்பவர்கள் பல்வேறு இன்னல்களை எதிர்நோக்குகின்றனர்.

[இ-86]

## இந்தியாவிலிருந்து நல்லின ஆடுகள் தருவிக்கப்படும்

உரும்பிராய், ஒக். 19 நல்லின ஜமுனாபாறி ஆடுகள் இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்டு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களின் ஊடாகப்பயனாளிகளுக்கு வழங்கப்படவுள்ளன.

இதற்கான ஏற்பாடுகளை ஐ.நா. அபிவிருத்தித் திட்ட நிறுவனம் செய்துள்ளது.

100 ஆடுகள் நவம்பர் மாத முற்பகுதியில் தருவிக்கப்படவுள்ளன. யாழ். மாவட்டத்திலுள்ள 8 கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச்சங்கங்களுக்கும் இவை பகிர்ந்தளிக்கப்படும். கூட்டுறவுச்சங்கங்கள் இதற்கான பயனாளிகளைத் தெரிவு செய்து அவர்களுக்கு ஆடுகளை விநியோகிக்கும்.

இனவிருத்தி செய்து குட்டிகளை பயனாளிகள் சங்கத்துக்கு வழங்குவர். அவைகள் வேறு பயனாளிகளுக்கு விநியோகிக்கப்படும்.

சினைப்படுத்துவதற்கான கடா ஆடுகளும்இந்த100ஆடுகளுள் அடங்கும். (இ-154)

## மாடு திருடியவர் அகப்பட்டார்

உரும்பிராய், ஒக் 19 மாடுகளைத் திருடியதாகக் கூறப்படும் ஒருவர் ஊரவர்களால் பிடிக்கப்பட்டு பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

உரும்பிராய் வடக்கில் இச் சம்பவம் இடம்பெற்றது.

உரும்பிராய் வடக்கைச் சேர்ந்த ஒருவரின் இரு மாடுகளை இதே இடத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் திருடிச் சென்று தமது வீட்டில் வைத்திருந்தார் என்றும் —

உரிமையாளர் தமது மாடுகளைத் தேடிச்சென்ற போது இவரது வீட்டில் அவைகள் கட்டப்பட்டிருந்தது. ஊரவர்கள் மூலம் தெரிய வந்தது என்றும் —

ஊரவர்களின் உதவியுடன் இவர் கோப்பாய் பொலீஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ-154)

## நூல் வெளியீடு

கொழும்புத்துறை, ஒக்,19 யாழ். லங்காசித்த ஆயுர்வேத மருத்துவக் கல்லூரியின் பரராசசேகரம் சுரரோக நிதானம் எனும் வைத்திய நூல் வெளியீடு மேற்படி கல்லூரி மண்டபத்தில் இன்று செவ்வாய்க்கிழமை காலை 11 மணிக்கு யாழ். பல்கலைக் கழகப் பேராசிரியர் நா. சண்முகலிங்கம் தலைமையில் நடைபெறும். (க-30)

### முகாமைத்துவ வர்த்தக பீடத்தில்

## கற்பித்தல் ஊடக மொழியாக ஆங்கிலம் முக்கிய இடம்பெறும்

யாழ்ப்பாணம், ஒக. 19 யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ வர்த்தக பீடத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கான கற்பித்தல் ஊடக மொழியில் ஆங்கிலம் பிரதான பாடமாக அறிமுகம் செய்யப்படவுள்ளதாக முகாமைத்துவ வர்த்தக பீடாதிபதி எம். நடராஜசுந்தரம் உதயனுக்குத் தெரிவித்தார்.

இவ்விடயம் குறித்து பீடாதிபதி மேலும் தெரிவித்ததாவது:-

புதிய திட்டத்தின்படி முதலாம் வருட மாணவர்களின் கற்கைநெறிக்கான ஊடக மொழியில் எந்த வகையான மாற்றமும் செய்யப்படாமல் ஏற்கவே நடைமுறையில் இருப்பது போன்று தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் கற்பித்தல் இடம் பெறும் எனவும் —

இரண்டாம், மூன்றாம் மற்றும் நான்காம் வருட மாணவர்களுக்கான சகல பாடங்களும் இனிவருங்காலங்களில் ஆங்கிலம் மூலமே கற்பித்தல் மேற்கொள்ளப்படும் எனவும் —

பீடாதிபதி மேலும் தெரிவித்தார்.

யாழ். பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்று தற்போது வெளிநாடுகளில் வசிக்கும் மாணவர்கள் பலர் விடுத்த வேண்டுகோளை அடுத்தே கற்பித்தல் ஊடக மொழியில் மாற்றம் ஏற்படுத்தப்படவுள்ளதாகவும் —

இந்தப் புதிய திட்டத்தின் மூலம் பட்டம்பெற்று வெளியேறும் மாணவர்கள் ஆங்கிலத்தில் விசேட திறமையைப்பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கும் எனவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-7-10)

## உணவு வாகன எண்ணிக்கையை அதிகரிக்குக

வவுனியா, ஒக் 19 இராணுவக்கட்டுப்பாடற்ற வன்னிபகுதிக்கான உணவு வாகனத் தொடரணிகளின் எண்ணிக்கையை அதிகரிக்குமாறு கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களின் ஒன்றியம் அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

[ஐ - 7]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவத்தமிழ்ச்செல்வி பவள ஆண்டில் பெண்களுக்கு தனி முதியோர் இல்லம்

## ஆலோசனைக் கூட்டத்தில் தகவல்

யாழ்ப்பாணம், ஒக். 19
சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் பவள விழா ஞாபகார்த்தமாக ஆதரவற்ற பெண்களுக்கென தனியான முதியோர் இல்லம் ஒன்று அமைக்கப்பட உள்ளது.

செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் பவள விழா ஏற்பாடுகள் தொடர்பாக கடந்த 10 ஆம் திகதி தெல்லிப்பழை துர்க்காதேவி பொது அலுவலக மண்டபத்தில் மல்லாகம் மாவட்ட பதில் நீதிவான் மூ. சபாநாதன் தலைமையில் இடம்பெற்ற கூட்டத்தில் மேற்கண்ட தகவல் முன்வைக்கப்பட்டது.

பவள விழாவை முன்னிட்டு நூல் நிலையம் ஒன்று விரைவில் திறக்கப்படவேண்டுமென தலைவர் ஆலோசனை தெரிவித்தார்.

சமூக சமய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துமுகமாக பாடசாலைகள் தோறும் ஓய்வுபெற்ற கல்வியாளர்களை போதனையில் ஈடுபடுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டுமென ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொண்ட எழுத்தாளர் திருமதி கோகிலா மகேந்திரன் கேட்டுக் கொண்டார்.

பேராசிரியர் சுப்பிரமணிய ஐயர், யாழ். பல்கலைக் கழக மருத்துவ பீட சமூக நல மருத்துவர் ந. சிவராசா ஆகியோர் பயன்மிகு கருத்துக்களைத் தெரிவித்தனர்.

சமய, சமூக நிறுவனங்களின் பிரதிநிதிகள் பலரும் கூட்டத்தில் கலந்து கொண்டனர். (ஐ-ம)


புதிய கீழை / மேலைத்தேய
**இசை வகுப்புக்கள்**
**ஆரம்பம்: 19-10 99**
தொடர்பு:
Miss **வாசுகி ரங்கன்**
**நியூ வீணாகானம்**
16/2, கச்சேரி நல்லூர் வீதி.
யாழ். நகர்
(70075)


# ஏற்புவலி உண்டாகாது தடுக்குமாறு அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஒக். 19
உடலில் ஏற்படும் சிறிய காயங்கள், கீறல்களுச்கு உடனுக்குடன் தகுந்த சிகிச்சையை மேற்கொள்ளத் தவறுவதினால் உயிராபத்து போன்ற பெரிய விளைவுகளைச்சந்திக்க நேரிடலாம்.

தற்போது மழைகாலம் ஆரம்பித்துள்ளதால் இது போன்ற சிறிய புண்களில் கிருமித் தொற்று ஏற்பட்டு ஏற்புவலி நோய் உருவாகும் வாய்ப்பு அதிகமுள்ளது.

இதுபோன்ற சிறிய காயங்கள், புண்கள் உள்ளவர்கள் உயிராபத்தில் இருந்து விடுபட உடனடியாக ஏற்புத் தடுப்பூசி மருந்தை போட்டுக் கொள்ளுங்கள்.

மேற்கண்டவாறு யாழ். ஆஸ்பத்திரி சத்திரசிகிச்சைப்பிரிவு வட்டாரங்கள் அறிவுறுத்தி உள்ளன.

முதலாவது தடவையாக ஏற்றும் தடுப்பூசி ஏற்புத் தடை ஊசி மருந்துடன் மாத்திரம் நிறுத்திக் கொள்ளாது 42 ஆவது நாள் பின்னர் 6ஆம்மாதம் என 2ஆவது மூன்றாவது தடவை ஊசி மருந்துகளையும் கட்டாயமாக ஏற்றிக்கொள்ள வேண்டும் அவ்வாறு செய்வதன் மூலமே ஏற்புவலி நோய் வராது தடுத்துக் கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப் படுகிறது.

இதுபோன்ற சிறிய புண்களினால் ஏற்புவலி நோய்க்காளாகி நேற்று முன்தினமும், அதற்கு முதல் நாளும் மூவர் யாழ். ஆஸ்பத்திரியில் ஆபத்தான நிலையில் அனுமதிக்கப்பட்டு அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைக் குட்படுத்தப்பட்டுள்ளனர்.

அரிச்சந்திரன் கேதீஸ்வரன் [வயது 13 — காரைநகர்], சின்னத்துரை ஸ்ரீகாந்தா [வயது 41 — அளவெட்டி], ரி. பாலேந்திரன் [வயது21— சுதுமலை தெற்கு] ஆகிய மூவருமே அனுமதிக்கப்பட்டவர்களாவர்.

காயமடைபவர்கள் சிறியோராயினும், பெரியோராயினும் ஏற்புத்தடை ஊசி மருந்தை உரிய முறைப்படி ஏற்றிக்கொள்ளுமாறும், ஈரலிப்பான, அசுத்தமான இடங்களில் நடமாடுவதைத் தவிர்க்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது [ஐ]

## நீரிறைக்கும் இயந்திரங்கள் விநியோகம்

யாழ்ப்பாணம், ஒக். 19
'சீடா' திட்டத்தின் கீழ் யாழ். மாவட்டத்தில் இவ் வருடமும் சுழற்சி முறையில் விவசாயிகளுக்கு நீர் இறைக்கும் இயந்திரங்கள் விநியோகிக்கப்படவுள்ளன.

இத் திட்டத்தின் கீழ் இது வரையும் ஆயிரத்து 56 நீர் இறைக்கும் இயந்திரங்கள் விநியோகம் செய்யப்பட்டுள்ளதாக கமநல சேவை வட்டாரங்கள் தெரிவித்தன

[ஐ-5]

உ
சிவமயம்

## தசாக கிரஹஜஞ்ஞு அழைப்பு

அன்புடையீர்!
பிரமாதி வருஷம் புரட்டாதி மாதம் 23 ஆம் நாள் (10 - 10 - 99) ஞாயிற்றுக்கிழமை பிரதமை திதியில சிவபதமடைந்த
எங்கள் அன்புத் தாயார்

**திருமதி நாகேஸ்வரக் குருக்கள் தேவகுஞ்சராம்பாள்**

அவர்களின் ஆத்ம சாந்திக் கிரியைகள் பின்வரும் தினங்களில் நடைபெறும்.

| | | |
|---|---|---|
| 19 - 10 - 99 | செவ்வாய்க்கிழமை | காலை 9.00 மணி தசாகம் |
| 20 - 10 - 99 | புதன்கிழமை | காலை 10.00மணி ஏகோதிஸ்டம், மாசியம் |
| 21 - 10 - 99 | வியாழக்கிழமை | காலை 10 00மணி சபீண்டீகரணம் |
| 22 - 10 - 99 | வெள்ளிக்கிழமை | நண்பகல் 11.30 மணி கிரஹஜஞ்ஞும் |

மேற்படி தினங்களில் வந்து கலந்து அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

கதிரமலை சிவன்கோவில்,
சுன்னாகம்.
[70079]

# கேள்வி அறிவித்தல்

## பருத்தித்துறை பிரதேச சபை

கீழே விவரிக்கப்பட்டுள்ள அட்டவணையிலுள்ள வேலைகளை நிறைவேற்றுவதற்கான கேள்வி, வேலைகளைச் செய்வதற்கான தகுதியுடையவர்களிடமிருந்து 1999 - 10 - 27 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிவரை எம்மால் வழங்கப்பட்ட படிவங்களில் ஏற்றுக்கொள்ளப்பட்டு அன்று பிற்பகல் 2.00 மணிக்கு கேள்விச் சபையால் பரிசீலனைக்கு எடுக்கப்படும். அச்சமயம் கேள்வி சமர்ப்பிப்பவர் அல்லது அவரது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி சமுகமளிக்கலாம்.

அட்டவணையில் விவரிக்கப்பட்டவாறு மீளளிக்கக்கூடிய வைப்புப் பணத்தையும் மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப் பணத்தையும் செலுத்துவதன் பேரில் 1999 - 10 - 26 ஆம் திகதி பிற்பகல் 4 00 மணிவரை உரிய படிவங்கள் எம்மால் வழங்கப்படும்.

கேள்விகள் யாவும் அரக்கு முத்திரையிடப்பட்டு, தலைவர், பருத்தித்துறை பிரதேச சபை, புலோலி என்ற முகவரிக்கு குறித்த தினத்துக்கு முன் கிடைக்கக்கூடியதாக பதிவஞ்சலிலோ அல்லது அதற்கென தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியிலோ இடப்படல் வேண்டும். கேள்விப் பத்திரங்களை உள்ளடக்கிய அஞ்சலுறையின் இடதுபக்க மேல் மூலையில் எக்கேள்விக்கான பத்திரம் எனக் குறிப்பிடல் வேண்டும்.

இது விடய மேலதிக விவரங்களை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

| | கேள்வியின் பெயர் | மீளளிக்கக்கூடிய வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத படிவக் கட்டணம் |
|---|---|---|---|
| 1. | கம்பன் சனசமூக நிலையம், மந்திகை புலோலி | 800.00 | 100.00 |
| 2. | பூமகள் சனசமூக நிலையம், அல்வாய் மேற்கு. | 700.00 | 100.00 |
| 3. | பெரிய தேவனத்தாய் சனசமூக நிலையம், புலோலி. | 700.00 | 100.00 |
| 4. | புலோலியில் கடைகள் அமைத்தல் | 1000.00 | 100.00 |
| 5. | இலங்கேஸ்வரன் சனசமூக நிலையம்,துறையாமூலை புலோலி. | 750.00 | 100.00 |
| 6. | நாவலர் சனசமூக நிலையம், திருநாவலூர். | 250.00 | 100.00 |
| 7. | பாலர் பாடசாலை திருத்தம்வத்தனை. | 700.00 | 100.00 |

ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன்
ஜே. பி. யு. எம்.
தவிசாளர்,
பருத்தித்துறை பிரதேச சபை.

பருத்தித்துறை பிரதேச சபை,
புலோலி.
12 - 10 - 1999
(சி/9366)


ALL PURPOSE MULTI DIRECTIONAL
KOBE-52
TV/RADIO ANTENNA





- அனைத்து தொலைக்காட்சி சேவைகள்
- AM/FM வானொலி அலைகள்
- உட்பொருத்தப்பட்ட பூஸ்ட்டர்
- ஒரு பூஸ்டரிலிருந்து இரண்டு வெளியாக்கிகள்
- பணம் திரும்பத்தரும் உத்தரவாதம்

LANKA NIPPON
18, Keyzer Street, Colombo 11.
Tel: 437735, 324726
Fax : 437736
10, Trelawny Place,
(Behind Milk Bar)
Bambalapitiya Junction,
Colombo 4. Tel : 589992

(சி/9182)


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 1935 — 06 — 25
மறைவு 1998 — 09 — 30

அமரர்
**கந்தையா இராசேந்திரம்**
(இராஜ் மோகன் — பிரபல சோதிடர்)

ஆண்டு ஒன்று சென்றதையா!
மாறவில்லை எம் துயரம்
மண்ணுலகில் அழுது புரண்டாலும்
மாறிடுமோ எம் துயரம்.
மாண்ட நீர் வருவீரோ
மாறாத எம் துயர்தீர்க்க!

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைத் தினமும் வேண்டிப்பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, மக்கள், மருமக்கள்.

பிரதான வீதி (மடத்தடி),
சங்கானை.
(69994)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## புதிய நகர்வு

வர்த்தக சம்மேளனத்தின் தலைவர் லலித் கொத்தலாவல லண்டனுக்குச் சென்று தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளைச் சந்தித்து உரையாட முடிவாகி உள்ளது.

வர்த்தக சம்மேளனத்தின் முகதாவில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் முயற்சியின் ஒரு கட்டமே இது. தென்னிலங்கையின் பிரதான அரசியல் கட்சிகள் இரண்டும் — ஆளும் கட்சியான பொதுமக்கள் ஐக்கிய முன்னணியும் எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியும் — தமக்குள் ஓர் இணக்க நிலைக்கு வருவது குறித்து நான்கு கட்டப் பேச்சுக்கள் நடத்திவிட்டன.

தீர்வு விடயத்தில்விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு என்ன என்பதனை அறிவதும், வர்த்தக சம்மேளன முகதாவில் நடைபெறும் பேச்சுக்களின் போது ஏற்பட்ட முன்னேற்றங்களைத் தெரியப்படுத்துவதுமே லலித் கொத்தலாவலவின் லண்டன் விஜயத்தின் நோக்கம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

நாட்டினைப் பெரும் அழிவுக்கு இட்டுச் செல்லும் போர் நிறுத்தப்பட வேண்டும். அதன் பொருட்டு இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பது அவசியம்.

தமிழ் மக்கள் மட்டுமே இந்தக் கருத்துடையவர்கள் என்பதல்ல. தெற்கைச் சேர்ந்த சிங்கள மக்களில் பெரும் பகுதியினரும் இதே கருத்துடையவர்களாகவே இப்போது உள்ளனர்.

ஆனால் தமிழர்களுக்கு உரிமைகள் வழங்கப்படக்கூடாது. போர் தொடரப்பட்டு விடுதலைப் புலிகள் — விடுதலைப் புலிகள் என்ற பெயரில் தமிழ் மக்கள்— அழிக்கப்பட வேண்டும், ஒடுக்கப்பட வேண்டும் என்ற கருத்துடைய இரண்டாம் தரப்பினரும் தெற்கில் இல்லாமல் இல்லை.

தமிழர்களுக்கு கிடைக்க வேண்டிய நியாயமான, நீதியான உரிமைகள் வழங்கப்படக் கூடாது என்ற பேரினவாதிகளின்—பேரினவாதத்தை முன்னெடுப்பவர்களின் — எண்ணிக்கை குறைவாக இருந்த போதிலும் அரசியல் வாதிகள் அவர்களின் செல்வாக்குக்கு ஆட்பட்டு விடுகிறார்கள்! பேரினவாதிகளைப் பொருட்படுத்தாது தமிழர் உரிமைகளை வழங்கும் மனத்துணிச்சலும், உண்மையான மனவிருப்பமும் அரசியல் தலைவர்களிடம் இல்லாததாலேயே இனப்பிரச்சினைக்கு இன்னமும் தீர்வு காணமுடியவில்லை.

தென்னிலங்கை அரசியல்வாதிகள் இனப்பிரச்சினைத் தீர்வு விவகாரத்தில் ஓரணியில் நின்று செயற்பட்டால் பேரினவாதிகளின் விருப்பம் நிறைவேற வாய்ப்பில்லை.

வர்த்தக சம்மேளனத்தின் முயற்சி ஓரளவு முன்னேற்றம் கண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படினும் விவரங்கள் வெளியாகவில்லை.

தேர்தல் காலம் நெருங்கி வருவதால் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் முயற்சிகள் குறித்துப் பெரிதாகப் பேசுவதற்கு அரசியல் கட்சிகள் காத்திருக்கின்றன. அதனால் அவை நேரடியாக மட்டுமன்றி மறைமுகமாகவும் இத்தகைய முயற்சிகளைப் பெரிதாக்கலாம்.

எப்படியோ, விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டை அறிந்து கொண்டு தமது முயற்சியை முன்னெடுக்க இரண்டு கட்சிகளும் இணங்கியிருப்பது ஒரு புதிய நகர்வு எனலாம். இந்த நகர்வு எந்தளவில் முடியும் என்று எதிர்வு கூற இயலாது. தேர்தலை நாடிய நகர்வல்ல என்பது நிரூபணமானால் சரிதான்.

# தினமும் அருள்சுரக்கும் அன்னையை போற்றித் துதிக்கும் நவராத்திரி விழா

## வித்தைகளை ஆரம்பிக்க உகந்த விஜயதசமி

**ஆறு. திருமுருகன்**

‘‘ஒன்றாய் அரும்பிப்
பலவாய்
விரிந்திவ் வுல
கெங்குமாய் நின்றாள்’’

என்று அன்னை பராசக்தியின் பேராற்றலைப் போற்றுவது தமிழ் மரபு. அருள் மயமான அன்னை பராசக்தி இந்த அவனியைப் படைத்து அருளாட்சி செய்கின்றாள். இந்துக்கள் இவ்வையகத்தை இயங்க வைக்கும் அன்னையாம் பராசக்தியை வாழ்த்திப் போற்றி நன்றி செலுத்துவதற்காய் நவராத்திரி என்னும் திருநாள்களை ஆண்டுதோறும் சிறப்பித்து வழிபடுவர். ஒன்பது நாள்கள் பராசக்தியின் முப்பெரும் வடிவமாகிய துர்க்கை, இலக்குமி, சரஸ்வதி, ஆகிய மூவர்க்கும் விழா எடுத்துப் பத்தாவது நாள் விஜயதசமி என்னும் வெற்றித் திருநாளை இந்துக்கள் பெருநாளாகக் கொண்டு வழிபட்டு வருகின்றனர்.

சக்திக்கு எடுக்கும் விழா பெண்மைக்கு இந்துக்கள் கொடுக்கும் மதிப்பினை விளக்கி நிற்கின்றது. இந்துக்கள் தாயாகிய பராசக்தியை எங்கும் எதிலும் கண்டு, கருதி வழிபடுவர். பூமியைப் பூமாதேவி என்றும். தண்ணீரைக் கங்கை மாதா என்றும், உண்ணுகின்ற சோற்றைக் கூட அன்னலட்சுமி என்றும், ஆயிரம்திருநாமங்கள்சொல்லி அனைத்திலும் சக்தியை வணங்கி மகிழ்வர். உலகின் அற்புதப் பிறப்பாகிய மானிடப் பிறவியை இம் மாநிலத்தில் காப்பதற்கு துர்க்கை, இலக்குமி, சரஸ்வதி என்ற முகூர்த்தங்களாய் விளங்கி பராசக்தி அருளாட்சி செய்கின்றாள். இவற்றைவிட சப்த மாதாக்களாய் வடிவமெடுத்து இவ்வையகத்தை இயக்குகின்றாள்.

அனைத்திலும் நிறைந்த அன்னை பராசக்தியை நவராத்திரி நாள்களிலும் விஜயதசமி என்னும் வெற்றித் திருநாளிலும் அன்னை இவ் வையகத்திற்கு ஆற்றும் அருட் சிறப்புக்கு அடியவர்கள் நன்றிக் காணிக்கை செலுத்துவர். நவராத்திரியில் முதல் மூன்று நாள்களும் வீரம் தருகின்ற துர்க்கை அம்பாளைநினைந்து நன்றி கூறி வழிபடுவர். வீரம் என்னும்போது எம்மைப் படைத்த பராசக்தியிடம் துன்பம் இல்லாத வாழ்வினை வேண்டித் துதிப்பர். பராசக்தி துர்க்கையின் வடிவில் நின்று ஜீவராசிகளுக்குத் தைரியம் கொடுப்பவள். அத்தாய் எமக்குத் தந்த உடல், உள பலத்தை எண்ணி நாம் நன்றி செலுத்துதல் எமது வழிபாட்டுக் கடனாகும். அறியாமையின் காரணமாக எம் சரீரத்தை தீமைக்குப் பயன்படுத்துவோமேயானால் தைரியம் தரும் தாயாகிய துர்க்கைக்கு நாம் நன்றியற்றவர்களாவோம். எனவே துர்க்காதேவி எமக்கு தந்த தூய்மையான சரீரத்தை தூய பணிகளுக்கு தர்மகாரியங்களுக்கு அர்ப்பணம் ஆக்குவதே உண்மை



வழிபாடாகும். அங்கக் குறைபாடு உடையவரை ஏளனம் செய்வதும், அலட்சியமாக வாழ்வதும் வீரம் தரும் துர்க்கையின் பேரருளுக்கு இடையூறாகும்.

துர்க்கா தேவிக்கு நன்றி செலுத்துவது போலவே நவராத்திரி காலத்தில் எம் மகிழ்ச்சிக்கு காரணமாய் விளங்குகின்ற மகாஇலக்குமிக்கும் இந்துக்கள் நன்றி செலுத்துகிறார்கள். உண்ண உணவும், உடுக்க உடையும், உறங்குவதற்கு இருப்பிடமும், நாம் மகிழ்வதற்கு இன்பமும் தருபவள் மகாலட்சுமி. அவள் தந்தவற்றை நினைத்து போற்றித் துதித்தல் நவராத்திரி கால வழிபாட்டுக் கடமை ஆகும் நாம் அனுபவிக்கும் மகிழ்ச்சிக்குரிய அனைத்தும் மகாலட்சுமிக்கு உரித்துடையவை ஆகும். எமக்குக் கிடைத்த பேறுகளை நாம் மதித்துப் பேணுகிறோமா என எதிர்பார்த்துக் காத்திருப்பவள் மகாலட்சுமி எந்தவொரு பொருளையும் நாம் உதாசீனம் செய்தால் உத்தமியாம் திருமகள் எம்மை வெறுப்பாள். எனவே நவராத்திரி காலத்தில் திருமகளை அவள் தினந்தோறும் தரும் நன்மைகளை நினைத்து இந்துக்கள் போற்றித் துதிப்பர்.

வீரம் தரும் துர்க்கையையும், மகிழ்ச்சி தரும் மகாலட்சுமியையும் நன்றியோடு வழிபட்ட இந்துக்கள் நவராத்திரியின் இறுதி நாள்களில் அஞ்ஞான இருளைப் போக்கி மெய்ஞ்ஞான அறிவு தரும் சரஸ்வதியை நினைத்து வழிபடுவர். ஆறறிவுடன் வாழும் அற்புதப் பிறவியைத் தந்த அன்னை பராசக்தியை கலைமகளாகப் போற்றி வழிபாடு செய்வர் எவ்வுயிர்க்கும் கொடுக்காத ஆறறிவை இந்த அவனியில் மானிடருக்குத் தந்த தாய் வாணியே. இம் மாநிலம் பயனுற வாழ்வதற்கு வழிகாட்டுக என வேண்டி வழிபடுவர். அறிவுதரும்அன்னை ஆற்றலில் மிகுந்தவராய், வித்தைகளில் வித்தகராய் நாம் வாழ வழி காட்டுபவள். அவள் தந்த ஆற்றல்களை அனுதினமும் நினைத்து நாம் துதித்தல் வேண்டும். அன்னை கலைவாணி எமக்களித்த ஆற்றல்களை நாம் அலட்சியம் செய்வோமாயின் அறியாமை என்னும் இருளில் இடருற நேரும். எனவே எம் வாழ்வை வழிப்படுத்தும் அன்னை பராசக்தியின் அருளினை நினைத்து இத் திருநாள்களில் எமக்கு கிடைத்தவற்றுக்கு நன்றிகூறி நாம் தவற விட்டதற்கு மன்னிப்பு கோருதல் வழிபாட்டுக் கடனாகும்.

‘‘சக்தியாய் விந்துசக்தியாய்
மனோன்மணி தானாகி
ஒத்துறு மகேசையாகி
யுமை திரு வாணியாகி.
வைததுறஞ்சிவா திக்கிங்ஙன்
வரும் சக்தி யொருத்தியாகும்
எத்திற நின்றான் ஈசன்
அத்திறம் அவளும் நிற்பள்’’

என்ற சிவஞான சித்தியார் வார்த்தைக்கு அமைய ஈசனோடு இணைந்து நின்று எம்மைத் தாங்கி நிற்கும் பராசக்தியை இந்துக்கள் கொலு இருத்தி அழகுக் கோலமிட்டு ஆடிப்பாடி விரதம் அனுட்டித்து வழிபாடு செய்யும் புண்ணிய தினங்கள் நவராத்திரி காலம்ஆகும்.

### விஜயதசமி நவராத்திரியின் நிறைவு

தொடர்ந்து விஜயதசமி என்னும் வெற்றித் திருநாளை உலகம் முழுவதும் இந்துக்கள் கொண்டாடி மகிழ்வர். மகிடாசுரன் என்னும் அசுரனை அன்னை பராசக்தி சங்காரம் செய்து அடியவர்களைக் காத்த திருநாள் விஜயதசமி என்னும் திருநாள் ஆகும். காட்டு எருமையின் வடிவமாகிய மகிடாசுரன் தேவர்களுக்கும், மனிதர்களுக்கும் இன்னல் செய்து இனிய வாழ்வைத் துன்பம் ஆக்கிய வேளை, ஆற்றல் நிறைந்த அன்னை பராசக்தி அடியவர்களை இந்நாளில் அசுரனிடம் இருந்து மீட்டெடுத்தாள். இதனை இந்துக்கள் இன்றும் நினைந்து நோன்பு காத்து வன்னி மரத்தை அல்லது வாழை மரத்தை நட்டு அதனைச் சங்காரம் செய்து தம்மைச் சூழ்ந்த அறியாமை இந்நாளில் இருந்து அகலவேண்டும் என அம்பாளைப் பிரார்த்திப்பர். வெற்றிக்குரிய நாளாகக் கருதப்படும் விஜயதசமியில் வித்தைகளை ஆரம்பிப்பதும் வெற்றிக்குரிய காரியங்களைத் தொடங்குவதும் நற்பயனைத் தரும் என்பது இந்துக்களின் மிகுந்த நம்பிக்கை ஆகும்.

★

## வாணி விழாக்கள்

உரும்பிராய், ஒக். 19

உரும்பிராய் சந்திரோதய வித்தியாசாலையில் வாணி விழா இன்று காலை கொண்டாடப்படவுள்ளது.

விசேட சொற்பொழிவுகள் மற்றும் காலை நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன.

[க-154]

★ ★ ★

யாழ்ப்பாணம், ஒக். 19

சுழிபுரம் மேற்கு கலைமகள் சனசமூகநிலையத்தின் வாணி விழாவும், பரிசளிப்பு விழாவும் இன்று பிற்பகல் 4 மணிக்கு கலைமகள் கலையரங்கில் இ. அருளானந்தம் தலைமையில நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வில் பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரியின் ஓய்வுபெற்ற அதிபர் வே நாகராசா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

(க)

★ ★ ★

கொழும்புத்துறை, ஒக். 19

கொழும்புததுறை துரையப்பா வித்தியா சாலையில் இனறு காலை 9. 30 மணிககு வாணி விழா அதிபர் எஸ். மகேநதிரன தலைமையில் நடைபெறும்.

[க-30]

★ ★ ★

கொழும்புத்துறை, ஒக். 19

கொழுமபுததுறை இந்து மகாவிதையாலயத்தில் இன்று காலை 9. 30 மணிக்கு வாணி விழா அதிபர் இ சோதிலிங்கம் தலைமையில் நடைபெறும்.

(க-30)

★ ★ ★

வலி. வடக்கு, ஒக். 19

நல்லூர் பிரதேச செயலகத்தில் வாணி விழா இன்று செயலக மண்டபத்தில் கொண்டாடப்படவுள்ளது.

(க-86)

★ ★ ★

வலி. தென்மேற்கு, ஒக். 19

நவாலி வடக்கு — கலைமகள் பாலர் பாடசாலையில் இன்று வாணி விழா கொண்டாடப்படவுள்ளது.

(க-185)

### ஆனந்தக் கலைச்செல்வி உதயம்

ஏடும்எழுத் தாணியேந்தி ஏழு வகை
எழிலாக ஆட்சிசெய்யும் எங்கள் அன்னை
கூடும் அருள் கடைக்கண்ணின் நோக்கால் எங்கள்
கொழுவினைகள் தீர்த்துவைக்கும் தெய்வ மாதா
பாடும் தமிழ் இசைக்கலையின் வீணை நாதம்
பாரினிலே தவழ்ந்திடவே ஞானம் நல்கி
ஆடும் எழிற் பரதக்கலை நடம்பு ரியும்
ஆனந்தக் கலைச்செல்வி உதயம் ஆனாள்.

‘‘மஹாவித்துவான்’’
யாழ்ப்பாணம் பிரம்மஸ்ரீ நா. வீரமணிஐயர் எம். ஏ.

### நாளை

ஐப்பசி 3
புதன்கிழமை
திதி: தசமி
முற்பகல் 7.49 வரை.
நட்சத்திரம்: அவிட்டம்
பிற்பகல் 4.20 வரை
சுபநேரம்: 4.32 — 6.02
ராகுகாலம்: 12.02—1.32
(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

### உதயவாக்கு

மனிதனை அணி செய்யும் குணங்களில் முக்கியமானது தைரியம்.

— டேனியல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயணப் பாதுகாப்பு அனுமதி வழங்கப்பட்டவர்களின் விவரம்

யாழ்ப்பாணம், ஒக். 18

யாழ். குடாநாட்டில் இருந்து வெளி இடங்களுக்கு பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் பெயர் விவரங்கள் உதயனில் வெளியாகி வருவது தெரிந்ததே.

பயண அனுமதி வழங்கப்பட்டோரின் (இம் மாதம் முதலாம் திகதி வரை) பதிவு இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாக வருமாறு:

பளை

(116452ஏ), (116468ஏ), (116469ஏ).

பருத்தித்துறை

(110219ஏ), (108075ஏ], [108075பி], (115342ஏ[, [115342பி], [115377ஏ], [119995ஏ), [120142ஏ], [120142பி).

உடுவில்

(117667ஏ], (121063ஏ). (117359ஏ], (119270ஏ), [119343ஏ], (121447ஏ], (121447பி), (121447சி), (121447டி], [121509சி[, (121515பி), (109818ஏ[, (121398ஏ), [121398பி), (121478ஏ).

தெல்லிப்பழை

(121463ஏ], [113879ஏ], [119223ஏ], [119223பி].

பயண அனுமதி வழங்கப்பட்டோரின் (இம் மாதம் 5 ஆம் திகதி வரை) பதிவு இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாக வருமாறு:

சங்கானை

(112827ஏ), (112827பி), (112930பி), (117370ஏ), (119372ஏ), (121489ஏ), (121522ஏ).

★

சாவகச்சேரி

(117767பி), (117767சி), (119523ஏ), (119523பி), (120982ஏ), (120982பி), (120982சி), (120983ஏ), (120983பி), (120984ஏ), (120984பி), (120984சி), (121005பி), (121005சி), (120005ஈ), (129496ஏ), (129496பி),

★

யாழ்ப்பாணம்

(104758ஏ), (112711ஏ), (115977ஏ), (117844ஏ), (117844பி), (117844சி), (117844டி), (117961ஏ), (117976ஏ), (118095ஏ), (119690ஏ), (119702ஏ), (119702பி), (119702சி), (119702டி), (119705ஏ), (119705பி), (119713ஏ), (119732ஏ), (119732பி), (119733ஏ), (119766ஏ), [119766பி), (120302ஏ), [120302பி], [120346ஏ, [120418ஏ], [120441ஏ], [120456ஏ[, [120466ஏ], [120480ஏ], [120501ஏ[, (120501பி], [120519ஏ], [120588ஏ], [120617ஏ], ]120646ஏ], [120646பி], [120665ஏ], [120665பி], [120677ஏ], ]120677பி], [120747ஏ], [120747பி].

★

கரவெட்டி

[095481ஏ], [108239ஏ], [[113761ஏ], [113761பி], [113761சி], [113762பி], [115109ஏ], [115109பி], [115138ஏ], [115236ஏ], [115236பி], [115253ஏ], [115253பி], [115306ஏ], [115345ஏ[, [115345பி], [115409ஏ], [115417ஏ], [115483ஏ], [115530ஏ], [118759ஏ], [118759பி].

ஊர்காவற்றுறை

[11986சி], [11986டி], [11986எவ்], [12127ஏ], [12127பி], [12137ஏ], [12140ஏ], [12140பி], [12140சி], [12155ஏ], [12157ஏ], [12158டி].

கோப்பாய்

[[11120ஏ], [116556ஏ], [111049ஏ].

நல்லூர்

[118191ஏ], [118191பி], (118191சி), (118191டி), (120395ஏ), (120395பி) [120400ஏ]. (118431ஏ), (119211ஏ), (119212ஏ), (119214ஏ), (121469ஏ), (121636ஏ), (121387ஏ),

பளை

(116475ஏ), (116475பி), (116475சி)

பருத்தித்துறை

(120616ஏ), (111229ஏ), (111229பி), (113651ஏ), (113651பி), (113714ஏ), (115147ஏ), (115385ஏ), (115426ஏ), (115520ஏ), (119159ஏ), [119159பி], [119159சி], [119159டி], [119159ஈ[, [119793ஏ]. [119830ஏ], [119830பி], [119925ஏ].

சண்டிலிப்பாய்

(114624 ஏ), (114624பி), (114624 சி), (114857 ஏ), (114857 பி), (114859 ஏ), (116994 சி), (116994 டி), (119473 ஏ), (119473 பி). (121379 ஏ),(121379 பி), (121418 ஏ), (121420 ஏ), (121420பி), (119410 பி), (118350 ஏ), (119410 ஏ), (119410 சி), (121519 ஏ), (121519 பி), (121575 ஏ), (121575 பி), (121603 ஏ), (121603 பி)

தெல்லிப்பழை

[116745ஏ], [119391 ஏ], [121532 ஏ], (121532 பி], (118387 ஏ), (118387 பி) [118335 சி], [118335 பி], [118335 ஏ].

உடுவில்

[116866ஏ],[121073 ஏ], [121073 பி], [118404 ஏ], [119307 ஏ], [119307 பி], [119447 ஏ], [119466 ஏ], [119466பி], [121394 ஏ[, [121498 ஏ], [121646 ஏ], [121653 ஏ], [119450 ஏ], [119187 ஏ], [119283 ஏ].

வேலணை

[11954 ஏ], [11954 பி], [12136 ஏ], [12149 ஏ], [12149 பி], (12159 ஏ), (12164 ஏ), (12169 ஏ).

பயண அனுமதி வழங்கப்பட்டோரின் [இம் மாதம் 6 ஆம் திகதி வரை] பதிவுஇலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாக வருமாறு:-

சாவகச்சேரி

[114522ஏ], [115708ஏ], [115708பி], [115708சி], [118513ஏ], [118522ஏ], [118528ஏ], [118528பி], [118561ஏ], [118584ஏ], [118606ஏ], [118612பி], [118639ஏ], [118640ஏ], [118640 பி], [118640சி], [118640டி], [118640 ஈ], [118645ஏ], [118645பி], [118671ஏ], [118673ஏ], [118673பி[, [118673சி], [120780ஏ], [120780பி], [120780சி], [120780டி], [120785ஏ], [120785பி[, [120791ஏ], [120791பி], [120791சி]. (120791டி), (120796ஏ), (120800ஏ) (120802ஏ), (120804ஏ), (120807ஏ), (120807பி), (120810ஏ), (120810பி), (120827ஏ), (120835ஏ), (120838ஏ), (120839ஏ), (120850ஏ), (120851ஏ), (120854ஏ). (108826ஏ), (114436ஏ), (115770ஏ), (118511ஏ), (118529ஏ), (118529பி), (118562ஏ), (118578ஏ), (118656ஏ), (118661ஏ), [118663ஏ], [118663பி], [120776ஏ], [120781ஏ], ]120781பி], ]120797ஏ], ]120815ஏ], ]120845ஏ[, ]120845பி].

யாழ்ப்பாணம்

(120504ஏ), (120630ஏ), (120649ஏ) (112345ஏ), (120282ஏ), (120365ஏ), (120509ஏ). (120560ஏ), (120629ஏ), (120656ஏ), (120656பி), (120697ஏ), (021712ஏ), (120732ஏ), (120769ஏ), (120770ஏ), (122401ஏ), (122406ஏ), (122422ஏ), (122460ஏ), (121784ஏ),

கரவெட்டி

[111700ஏ], [115318ஏ], [115438ஏ], [115500ஏ], [115563ஏ], ]118708ஏ], (118717ஏ), (118717பி), (118739ஏ), (118753ஏ). (118753பி), (118753சி), (118753டி), (118754ஏ), (118768ஏ), (118789ஏ), (118789பி). (118828ஏ), (118852ஏ), (118852பி), ((118983ஏ), (118983பி). (118999ஏ), (119037ஏ), (119981ஏ), (120010ஏ), (120018ஏ), (120174ஏ), (120218ஏ), (120218பி), (199856ஏ).

நல்லூர்

[114009ஏ], [120587ஏ]. [120606ஏ]. [120696ஏ], [120740ஏ].

பளை

[116460டி], ]116473ஏ], [121876ஏ], [121876பி], [121878ஏ], [121878பி].

பருத்தித்துறை

[106827ஏ], [118755ஏ], [118755பி], [118811ஏ], [118861ஏ], [118892ஏ], [118892பி], [119050ஏ], [119101ஏ], [119101பி], [119101சி], ]120153ஏ], [120153பி], [120153சி], [120153டி], [120153ஈ], [120165ஏ].

பயண அனுமதி வழங்கப்பட்டோரின் (இம் மாதம் 7 ஆம் திகதி வரை) பதிவு இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாக வருமாறு:-

சங்கானை

(114646ஏ), (114646பி), (114646சி), (114896ஏ), (117440ஏ), (117440பி), (117440சி), (114957ஏ), (114957பி), (114899ஏ), (121660ஏ), (121660பி), (121650ஏ).

சாவகச்சேரி

(120980ஏ), (120980பி), (119522ஏ), (119522பி), (119506ஏ), (119506பி), (120812ஏ), (120812பி), (120812சி), (118520ஏ), (120792ஏ), (118633ஏ), (118633பி), (120824ஏ), (120824பி), (120824சி), (120824டி), (120855ஏ), (118580ஏ), (118580பி), [120826ஏ], [120830ஏ]. [120830பி], [120787ஏ], [120842ஏ], [120842பி], [120842சி], [120842டி], [120853ஏ],

யாழ்ப்பாணம்

[104317ஏ]: [120596ஏ], (122421ஏ], [120579ஏ], [121281ஏ], [100571ஏ[, (100571பி], [117789ஏ], [120621ஏ], (120527ஏ), [120530ஏ], (120530பி), [120598ஏ], (120598பி), [120598சி], (120598டி], [120598ஈ],[120598எவ்], (120365ஏ], [128276ஏ], [128276பி], [128276சி], [120547பி]. (120547சி), [120547டி), (118216ஏ), (120283ஏ), [114265ஏ], [120297ஏ], (120455ஏ], (120687ஏ), [120687பி), (120490ஏ,) (120424ஏ],

கரவெட்டி

[118714ஏ]. [118714பி],

கோப்பாய்

[116931ஏ], [116543ஏ]. [116543பி], [116543சி], [116532ஏ], [116532பி], [116532சி], [119652ஏ], [091438ஏ], [119093ஏ], [119093பி], [119093சி], [117682ஏ],

நல்லூர்

(121563 ஏ), (121563பி), (121517 ஏ[, (121517 பி], [114741 ஏ], [121618 ஏ], ]121435 ஏ[, ]121633 ஏ[, [121634 ஏ[, [121553 ஏ], [121553 பி], [121419 ஏ[, [121419 பு[, ]112957 ஏ[, ]112957 பி[ ]112957 சி [, ]112957 டி[. [121614 ஏ[,[121572 ஏ[, ]121572 பி], ]117622 ஏ[, [117554 ஏ), (110303 ஏ), (110459 ஏ), (110459 பி], (117621 ஏ), (110304 ஏ), (117677 ஏ), (117683 ஏ), [117678 ஏ], ]109966 ஏ[, ]117672 ஏ], [117718 ஏ[, (117717ஏ), (117709ஏ), (119560ஏ), (119647பி), (119609ஏ). (110215ஏ), (110214ஏ), (110213ஏ), (120547ஏ).

சண்டிலிப்பாய்

[121570ஏ], [121570பி]. [114755ஏ], [121610ஏ], [117371ஏ]. [118375ஏ], [118458ஏ], ]119454ஏ], [121595ஏ].

தெல்லிப்பழை

[121465ஏ[, [117423பி]. [119469ஏ[.

உடுவில்

]121583ஏ], [119259ஏ[, [118288ஏ[, [118288பி], [121611ஏ], [121611பி], [121611சி[, [121624ஏ], [121624பி[, ]121403ஏ[, [121403பி]. [121402ஏ], [121069ஏ], [121069பி]. [119598ஏ], [100048ஏ], [119647ஏ].

## பி.சி. பெரேரா குழுவின் அறிக்கைப்படி

# 30 சதவீத ஓய்வூதிய அதிகரிப்பை தருக

### ஓய்வூதியர் சம்மேளனம் ஜனாதிபதிக்கு மகஜர்

பி.சி பெரேரா குழுவின் அறிக்கையில் சிபார்சு செய்யப்பட்ட 30 சதவீத அதிகரிப்பையாவது அடுத்த வரவு செலவுத் திட்டத்துடன் வழங்கி ஓய்வூதியர்களுக்கு நிவாரணம் வழங்கும்படி வேண்டுகிறோம்.

வடமாநில ஓய்வூதியர்சங்கங்களின் சம்மேளனம்ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு அனுப்பி வைத்துள்ள மகஜரில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த மகஜரில்மேலும்தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-:

ஜனவரி 1997 முதல் சம்பளங்களும் ஓய்வூதியங்களும் மீளாய்வு செய்யப்பட்டபோதும் ஓய்வூதியங்கள் பத்து சதவீதத்தால் மட்டுமே அதிகரிக்கப்பட்டன. இது சம்பள அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் சொற்பமானதே.

நாம் இருதடவைகள் அனுப்பிய மகஜர்களில் பி.சி. பெரேரா சம்பளக்கமிட்டி அறிக்கையின் அமுலாக்கம் தொடர்பாகஓய்வூதியர்களின் ஏமாற்றத்தைதங்கள் கவனத்துக்குக் கொண்டுவந்தோம்.

எமது கோரிக்கைகள் ஒய்வூதிய முரண்பாட்டுக்குழுவொன்றின் நியமனத்தை எதிர்பார்த்து கிடப்பில் போடப்பட்டிருக்கின்றன.

வாழ்க்கைச் செலவு அதிகரிப்பை ஈடு செய்யும் வகையில் பொதுச்சேவை சம்பள மீளாய்வுடன் ஏக காலத்தில் ஓய்வூதியங்களும் மீளாய்வு செய்யப்பட்டு ஓய்வூதியர்களுக்கு நிவாரணம் வழங்கப்பட வேண்டும் என்றவணசிங்க கமிட்டி அறிக்கையின் சிபார்சு பின்பற்றப்படவேண்டியதை மீண்டும் வலியுறுத்த விரும்புகின்றோம்.

இப்படி அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-5)

## யாழ். விஞ்ஞான சங்க ஏற்பாட்டில்

# பாடசாலை மாணவரிடையே விஞ்ஞான பாடப் போட்டிகள்

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் 1999 / 2000 ஆண்டுக் காலத்தில் யாழ். மாவட்டப் பாடசாலை மாணவர்களுக்கிடையே விஞ்ஞானக் கட்டுரைப்போட்டி, விஞ்ஞான வினா- விடைப்போட்டி, விஞ்ஞானப் பேச்சுப் போட்டி, விஞ்ஞானக் கண்காட்சிப் போட்டி என்பவற்றைநடத்த நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது.

விஞ்ஞானக் கட்டுரைப் போட்டி இம் மாதம் 29 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி, சாவகச்சேரி இந்துக்கல்லூரி, நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், மானிப்பாய் இந்துக் கல்லூரி ஆகிய இடங்களில் நடைபெறவுள்ளது.

விஞ்ஞான வினாவிடைப் போட்டிக்கான எழுத்துப் பரீட்சை எதிர்வரும் டிசெம்பர் மாதத்திலும், விஞ்ஞானப் பேச்சுப்போட்டியும் விஞ்ஞானக் கண்காட்சிப் போட்டியும் அடுத்த வருடம் ஜனவரி மாதத்திலும் நடைபெறுமென யாழ்ப்பாணவிஞ்ஞான சங்கத்தின் பொதுச் செயலாளர் தெரிவித்தார். [ஐ)

## அகண்டநாமபஜனை

வடபிராந்திய சத்தியசாயி நிறுவனங்கள்இணைந்துநடத்தும் அகண்ட நாம பஜனை யாழ். ஸ்ரீசத்தியசாயி சேவா நிலையத்தில் நாளை புதன் கிழமை காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை நடைபெறவுள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாணி விழாக்கள்

சுதுமலை, ஒக். 19

சுதுமலை நாமகள் சன சமூக நிலையத்தின் வாணி விழா இன்று காலை 7 மணி முதல் ஆரம்பமாகி இடம் பெறவுள்ளது. (ஐ-7-139)

★ ★ ★

யாழ். மத்திய கல்லூரி இந்துமா மன்றம் நடத்தும் வாணி விழா இன்று காலை 8 மணிக்கு கல்லூரியின் பிரார்த்தனை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ஐ-7)

★ ★ ★

சாவகச்சேரி நகரசபை நடத்தும் வாணி விழா இன்று நண்பகல் 12 மணிக்கு நகர சபையின் பொது மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ஐ-7-117)

★ ★ ★

கைதடி மத்தி வளர்மதி சனசமூக நிலையத்தின் வாணி விழா இன்று நடைபெறுகிறது, (ஐ-7)

★ ★ ★

கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலய வாணி விழாவும் ஏடு தொடக்கும் வைபவமும் இன்று முற்பகல் 10 மணி முதல் பாடசாலை அதிபர் தலைமையில் நடைபெறவுள்ளது. (ஐ--7-72)

★ ★ ★

மல்லாகம் மாவட்ட நீதி மன்றத்தில் இன்று நண்பகல் வாணி விழா இடம்பெறவுள்ளது.

மல்லாகம் மாவட்ட நீதிபதி இ. த, விக்னராஜா தலைமையில் நடைபெறவுள்ள இந்த விழாவில் மல்லாகம் மாவட்ட நீதிமன்ற முன்னாள் நீதிபதி மு. திருநாவுக்கரசு பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். [ஐ-7]

★ ★ ★

உரும்பிராய் வள்ளுவர் அக்கடமியின் வாணி விழா இன்று பிற்பகல் 3 மணிக்கு நிறுவன இயக்குநர் செல்வி ம. கேதீஸ்வரி தலைமையில் நடைபெறவுள்ளது. (ஐ-7-180)

★ ★ ★

யாழ். சம்றொக் கல்வி நிலையத்தின் வாணி விழா நிகழ்வுகள் நேற்று முன்தினம் நிறுவன இயக்குநர் ஆ. பீற்றர் சண் விஜயசிங்கம் தலைமையில் சிறப்பாக நடைபெற்றன.

கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலய அதிபர் சி. ஆ. சோதிலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். [ஐ-7]

★ ★ ★

புங்குடுதீவு மகா வித்தியாலய வாணி விழா இன்று முற்பகல் 10 மணிக்கு வித்தியாலய இந்து மாணவர் மன்றத் தலைவர் தலைமையில் நடைபெறும். [ஐ-7]

★ ★ ★

தொல்புரம் விக்னேஸ்வரா வித்தியாசாலையில் வாணி விழா இன்று காலை நடைபெறும். [க-30]

★ ★ ★

தொல்புரம் அ. மி. த. க. பாடசாலையின் வாணி விழா இன்று 9. 30 மணிக்கு அதிபர் திருமதி இராசையா - இராசேஸ்வரி தலைமையில் நடைபெறும். (க-30)

★ ★ ★

தொல்புரம் கிழக்கு விக்னேஸ்வரா சனசமூக நிலையத்தில் வாணி விழா இன்று காலை நிலையத் தலைவர் சி. உதயசூரியன் தலைமையில் நடைபெறும்.

ஏடு தொடக்கும் வைபவமும் இன்று இடம் பெறும். [க-30]

★ ★ ★

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைப் பண்பாட்டுப் பேரவையில் வாணி விழா இன்று மாலை பேரவை மண்டபத்தில் செ. மோகனதாஸ் தலைமையில் நடைபெறும். (க-30)

★ ★ ★

நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்தில்வாணிவிழாஇன்று காலை ஆதீன சுவாமிகள் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் தலைமையில் நடைபெறும். (க-30)

★ ★ ★

நாவற்குழி ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயத்தில் இன்று விஜய தசமி விழா வெகுசிறப்பாக நடைபெறவுள்ளது.

மாலை 5மணிக்கு மானம்பூ வைபவமும் நடைபெறும். [இ-10]

★ ★ ★

கைதடி நியூட்டன் கல்விக் கழகம் நடத்தும் வாணி விழா இன்று பிற்பகல் ஒரு மணிக்கு நடைபெறவுள்ளது.

கல்விக் கழக இயக்குநர் செ, சிவபாதசக்தி தலைமையில் நடைபெறும் இந்த விழாவில் கழக மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் இடம் பெறும். (க-74)

★ ★ ★

கோப்பாய் தெற்கு குளக்கண்டி ஆலடி ஸ்ரீ ஞான வைரவர் ஆலயத்தில விஜயதசமி விழா இன்று மாலை 5. 30 மணிக்கு நடைபெறவுள்ளது. [இ-10]

## சுதந்திரக்கட்சி பிரமுகர் நீதிமன்றில் ஆஜர்

நீதிமன்ற பிணை விவகாரத்தில் தலையீடு செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்ட சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் யாழ் மாவட்ட அமைப்பாளர் தங்கராசா குலநாயகம் நேற்று யாழ். நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டார்.

நீதிமன்ற விவகாரங்களில் அரசியல் தலையீடு செய்வது பாரதூரமான விளைவுகளையே ஏற்படுத்தும் என்று அவரை எச்சரிக்கை செய்த யாழ். மேலதிக நீதிவான் எஸ்.ஏ.ஈ. ஏகநாதன் உங்கள் வரம்புக்குள் நின்றே நீங்கள் செயற்பட வேண்டும் என்று கூறியதுடன் அவரை இரண்டாயிரத்து 500 காசுப் பிணையிலும் 10 ஆயிரம் ரூபா சரீரப் பிணையிலும் விடுவிக்குமாறு உத்தரவிட்டார்.

இவ் வழக்கு நவம்பர் 29 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. [ஐ-5]

## முதியோர் சிறுவர் தின விழா

நல்லூர் பிரதேச செயலகப் பிரிவில ஏற்பாடு செய்யப்பட்டுள்ள முதியோர், சிறுவர் தின விழாக்கள் நாளை புதன் கிழமை காலை முதல் பிரதேச செயலக மண்டபத்தில் பிரதேச செயலர் எஸ். செந்தில்நந்தனன் தலைமையில் நடைபெறவுள்ளது.

கிராம அலுவலர் பிரிவுகளில் இருந்து தெரிவு செய்யப்பட்டமுதியோர்கள் விழாவில் கௌரவிக்கப்பட உள்ளனர். முதியோர் தினத்தை ஒட்டி நல்லூர் கல்விக் கோட்டத்தால் நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவருக்கு பரிசில்களும் வழங்கப்படும்.

வசதி குறைந்த சிறுவர்களுக்கு அன்பளிப்புப் பொருள்கள் வழங்கும் வைபவமும் இடம்பெறும். [ஐ-180]

## இளைஞன் விடுவிப்பு

கொக்குவில் பகுதியில் கடந்த 10 ஆம் திகதி கைது செய்யப்பட்ட இளைஞர் ஒருவர் ஊரெழுமுகாமில்வைத்து நேற்று விடுவிக்கப்பட்டார்.

சைமன் சைலேஸ்வரன 25 வயது]என்ற இளைஞனே விடுவிக்கப்பட்டு பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டவர் ஆவார். [இ-8]

## மட்டக்களப்பு மாவட்ட அணி 200 ஓட்டங்களால் வென்றது

மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த 15 வயதுக்கு உட்பட்ட கிரிக்கெட் அணிக்கும் வவுனியா மாவட்ட கிரிக்கெட் அணிக்கும் இடையே நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் மட்டக்களப்பு அணி 200 ஓட்டங்களால் வவுனியா அணியைத் தோற்கடித்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மட்டக்களப்பு மாவட்ட அணி 50 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 285 ஓட்டங்களைப் பெற்றது.

யூட் 73, தயாளன் ஆட்டமிழக்காது40ஓட்டங்களையும் பெற்றனர்.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய வவுனியா மாவட்ட அணி 32.5 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 85 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. (ஐ-4-10)

## கிரிக்கெட்

யாழ்ப்பாணம், ஒக். 19

கல்வியங்காடு நொதேண் விளையாட்டுக்கழகம் யாழ். மாவட்ட ரீதியில் நடத்தும் ''பரா'' வெற்றிக் கேடயத்துக்கான 7 பேர் பங்குபற்றும் 12 ஓவர்கள் கொண்ட மாபெரும் மென்பந்துக் கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு சண் வி. க. அணி செவின் கொய்ன்ஸ் வி: க. அணியை எதிர்த்துவிளையாடும். (ஐ-8)

## கொக்கோகோலா கிண்ணம்: பாக். அணியிடம் இலங்கை நேற்று மண் கவ்வியது

சார்ஜா, ஒக். 19

சார்ஜாவில் நடைபெற்று வரும் 'கொக்கோகோலா' கிண்ணத்துக்கான மூன்று நாடுகள் பங்குபற்றும் ஒரு நாள் சர்வதேச கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் நேற்று இலங்கை—பாகிஸ்தான் அணிகளுக்கிடையேயான ஆட்டத்தில் — 118 ஓட்டங்களால் பாகிஸ்தான் அணி வெற்றி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் 50 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 239ஓட்டங்களைப் பெற்றது தொடர்ந்து விளையாடிய இலங்கை அணி 33 4 ஓவர்களில் தனது சகல விக்கெட்டுக்களையும் இழந்து 121ஓட்டங்களை மட்டுமே பெற்றது. (ஐ-4)

## உதைபந்தாட்டம்

யாழ். கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையே நடைபெற்று வரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் 3 ஆம் இடத்திற்கான போட்டிகள் இன்று மாலை 2.00 மணிக்கு யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நடை பெறவுள்ளன.

இந்தப் போட்டிகளில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

★ 16 வயதுப் பிரிவு:- புனித ஜோசப் வித்தியாலயம் எதிர் புனித ஜேம்ஸ் மகா வித்தியாலயம்

★ 18 வயதுப் பிரிவு:- புத்தூர் புத்தகலட்டி ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயம் எதிர் இடைக்காடு மகா வித்தியாலயம் [ஐ-4-86]

★ ★ ★

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரிக்கும் யாழ் மத்திய கல்லூரிக்கும் இடையேயான சினேகபூர்வ உதைபந்தாட்டப் போட்டிகள் இன்று இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

★ ★ ★

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் யூனியன் கல்லூரிக்கும் இடையிலான சினேகபூர்வ உதைபந்தாட்டப் போட்டிகள் இன்று யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன.

இந்தப் போட்டிகளில் 16, 18, 20 வயதுப் பிரிவு அணிகள் பங்குபற்ற உள்ளன. [ஐ-4-86]

## யாழ். கூட்டுறவுச் சங்கத்தில் பழுப்பு நிறச் சீனி தேக்கம்

யாழ்ப்பாணம், ஒக். 19

யாழ். ப. நோ. கூ. சங்கத்தில் விற்பனை செய்ய முடியாத நிலையில் 48 ஆயிரத்து 557 கிலோ பழுப்பு நிறச் சீனி தேங்கிப் போயுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது

இந்தச்சீனி கடந்த ஒகஸ்ட், செப்ரெம்பர் மாதங்களில் யாழ். செயலகத்திடமிருந்து கிலோ 25 ரூபா வீதம் கொள்வனவு செய்யப்பட்டது

மேற்குறிப்பிட்ட இரண்டு மாதங்களிலும் யாழ்ப்பாணத்தில் சீனிக்குப் பெருந்தட்டுப்பாடு ஏற்பட்டதைத் தொடர்ந்து இச் சீனி அவசர அவசரமாக யாழ். செயலகத்திடமிருந்து பெறப்பட்ட போதும் அதை உரிய காலத்தில் விற்பனை செய்ய முடியாமல் போய்விட்டதாக சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

தற்பொழுது வெள்ளைச் சீனி கட்டுப்பாட்டு விலையில் யாழ்ப்பாணத்தில் தாராளமாக விற்பனை செய்யப்படுவதால் இந்தப் பழுப்பு நிறச் சீனி விற்க முடியாத நிலையில் சங்கத்தில் தேக்கமடைந்துள்ளது.

ப. நோ. கூ. சங்கத்தினால் விற்க முடியாத நிலையிலிருக்கும் பழுப்பு நிறச் சீனியை மீளப் பெற்றுக்கொள்ளுமாறு சங்கத்தின்தலைவர் சீ.வீ.கே. சிவஞானம் யாழ் அரச அதிபருக்கு அண்மையில் கடிதம் ஒன்றினை அனுப்பிவைத்துள்ளார், (ஐ-5)

## செயலகத்துக்கு 2 கப்பல்களில் சீனி, அரிசி வந்துசேரும்

3 ஆயிரத்து 350 மெற்றிக் தொன் அரிசியும், 150 மெற்றிக்தொன் சீனியும் கப்பல் மூலம் யாழ். செயலகத்துக்கு எடுத்துவரப்படவுள்ளன.

கொழும்பிலிருந்து இந்த வார இறுதியில் காங்கேசன் துறை நோக்கிப் புறப்படவிருக்கும் 'குமண' கப்பலில் 850மெற்றிக்தொன் அரிசியும் ஆயிரத்து 600மெற்றிக்தொன் சீனியும் 75 மெற்றிக்தொன் பால்மாவும் எடுத்துவரப்படவுள்ளன.

'லங்கா முடித்த' கப்பலில் இரண்டாயிரத்து 500 மெற்றிக்தொன் அரிசியும், 75மெற்றிக்தொன்பால்மாவும்எடுத்து வரப்படவுள்ளதாக யாழ். செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை—

இரண்டாயிரத்து 243 மெற்றிக்தொன் மா கையிருப்பில் இருப்பதாகவும் மேலும் இரண்டாயிரத்து 700 மெற்றிக்தொன் மா கப்பலில் எடுத்து வரப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

யாழ். செயலக களஞ்சியத்தில் ஏழாயிரத்து 171 மெற்றிக்தொன் அரிசியும், 670.7 மெற்றிக்தொன் சீனியும்3396. மெற்றிக்தொன் பருப்பும் கையிருப்பில் இருப்பதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.


## வங்கிக் கிளை இடமாற்றம்

BANK OF CEYLON இலங்கை வங்கி

தற்போது யாழ். நகரில் இயங்கிவரும்

இலங்கை வங்கி காங்கேசன்துறைக் கிளை

தனது வாடிக்கையாளர்களின் நலன் கருதியும் பிரதேச அபிவிருத்தி கருதியும் மல்லாகம் சந்தியில் அமைந்துள்ள கட்டடத்திற்கு இடம்மாற்றம் செய்யப்பட்டு

25 – 10 – 99 திங்கட்கிழமை காலை 10. 00 மணிக்கு

வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்படும்.

பிரதம விருந்தினர்

திருமதி பத்தினியம்மா திலகநாயகம் போல்
(வலி. வடக்கு பிரதேச செயலர் / மேலதிக அரச அதிபர்)

இந்த நிகழ்வில் எமது தலைமையகத்திலிருந்து வருகை தரும்

திருமதி இசபெல் புஸ்பம் இரட்ணதுரை அவர்களும்
(உதவிப் பொது முகாமையாளர், வட பிராந்தியம்)

திருமதி கமலராணி துரைராஜா
(செயற்பாட்டு முகாமையாளர், வட பிராந்தியம்)

அவர்களும் பங்கு கொண்டு சிறப்பிப்பார்கள்.

வாடிக்கையாளர்களும்; நலன் விரும்பிகளும் இந்த விழாவில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

அடுத்த புத்தாயிரமாண்டுக்கான தேசத்தின் வங்கி

பிரதேச முகாமையாளர்
இலங்கை வங்கி,
பிரதேச காரியாலயம்,
யாழ்ப்பாணம்.

முகாமையாளர்
இலங்கை வங்கி,
காங்கேசன்துறை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது புதிய
வீடியோ
C D வெளியீடு

நாசர், ரோஜா,
மணிவண்ணன், விவேக்
நடிக்கும்

**முகம்**

(பிரதிகள் உடன் பெற்றுக்கொள்ளலாம்)

**வீடியோ விமல்**
யாழ்ப்பாணம்.
(சி/9413)



நேற்றைய புதிய பிரமிட்
வீடியோ CD வெளியீடு!

மம்முட்டி – பானுப்பிரியா
**சினிமா சூட்டிங்**

**I.T.N. Video,**
27, கோயில் வீதி,
கொக்குவில்.
T.P. No. 3123
(70080)


# அம்பகாமம்...

(முதலாம் பக்கத் தொடர்)

வவுனியாவுக்குக் கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

படையினர் நகர்வு முயற்சிகளை ஆரம்பித்து ஐந்தாவது நாளான நேற்று மோதல்கள் இடம்பெறவில்லை. எனினும் புலிகளும் படையினரும் கடும் ஷெல் தாக்குதல்களை நடத்தினர்.

ஐந்து நாள்கள் இடம் பெற்ற சண்டைகளில் ஏற்பட்ட சேதவிவரங்களை அரசுத்தரப்பும் புலிகளும் இன்னமும் உத்தியோக பூர்வமாக வெளியிடவில்லை.

[ஐ-7-164]

# மடு மாதா...

(முதலாம் பக்கத் தொடர்)

காலை கொழும்பிலிருந்து வவுனியாவுக்கு எடுத்துவரப்பட்டு பின்னர் அங்கிருந்து மன்னாருக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

நேற்றுப் பிற்பகல் 4 மணியளவில் இடம்பெற்ற பிரார்த்தனைச் சடங்குகளைத் தொடர்ந்து மாதாவின் சிலை கண்ணாடிப் பேழையினுள் வைக்கப்பட்டது.(ஐ-7–164)

# வவுனியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்

விக்கப்பட்டது.

இதேவேளை —

தாதியர்போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து வவுனியா ஆஸ்பத்திரி டாக்டர்களும் மறியல் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக அறிவித்துள்ளனர்.

[ஐ-7-164]

# மாங்குளம்...

(முதலாம் பக்கத் தொடர்)

அப் பாதை ஊடான போக்குவரத்து தடைப்படும் ஆபத்து ஏற்பட்டிருந்தது. எனினும் மாங்குளம் பாதை ஊடான போக்குவரத்துத்தடை நீக்கப்பட்டிருப்பதாக வன்னிப் படைத் தலைமையகம் நேற்று மாலை வவுனியா மாவட்ட செயலகத்துக்கு அறிவித்துள்ளது.

புலிகளின் அனுமதி கிடைக்கும் பட்சத்தில் சுமார் 20 லொறிகளில் உணவுப் பொருள்களையும் மற்றும் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதியில் இருந்து வந்து வவுனியாவில் தங்கியுள்ள சுமார் 350 பொது மக்களையும் நாளை இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிக்கு அனுப்பி வைக்க ஏற்பாடு செய்யப்படுவதாக வவுனியா மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ். ரகுநாதபிள்ளை தெரிவித்தார். (ஐ-7-21-164)

# சமவாய்ப்பு...

(முதலாம் பக்கத் தொடர்)

நிதி றஞ்சித் வீரரட்ண, கலாநிதி அமீல் இஸ்மாயில் ஆகியோர் சமவாய்ப்புச் சட்டமூலத்துக்கு எதிரான மனுக்களை விசாரிக்கத் தேவையில்லை என அறிவித்தனர்.

அத்துடன் இந்த முடிவை, நாடாளுமன்றத்துக்கு அறிவிக்குமாறும் சட்டமா அதிபருக்கு உயர் நீதிமன்றம் கட்டளை பிறப்பித்தது.

இந்த மாத ஆரம்பத்தில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்த இந்த சட்டமூலத்தை இறுதி நேரத்தில் சபையில் சமர்ப்பிப்பதில் இருந்து அரசாங்கம் பின்வாங்கியிருப்பது குறித்து தென்பகுதி அரசியல் வட்டாரங்களில் நேற்று பரபரப்பாகப் பேசப்பட்டது (ஐ-7

# தமிழ்...

[முதலாம் பக்கத் தொடர்]

காரிகளால் அவர் கைதுசெய்யப்பட்டு கொழும்புக்குஅனுப்பிவைக்கப்பட்டதாகவும்—

கொழும்பில் ரகசியமாக விமானத்தில்இருந்து இறக்கப்பட்டு குடிவரவுத் திணைக்களத்துக்கு ஊடாக அன்றி நேரடியாகவே அங்கிருந்து அவர் வேறு இடம் ஒன்றுக்கு கொண்டுசெல்லப்பட்டதாகவும் தமக்குத் தெரியவந்துள்ளதாக குமார் பொன்னம்பலம் ஜனாதிபதியின் கவனத்துக்குத் தெரியப்படுத்தி உள்ளார்.

(ஐ-21)

# பேச்சுக்கான...

(முதலாம் பக்கத் தொடர்)

தயாராக இல்லை.

''தேவையானால் மூன்றாந் தரப்பு ஒன்று உதவியாளராகச் செயற்படலாம்.

''இனப்பிரச்சினைக்கு யுத்த வழியின்றி சமாதான வழியில் தீர்வு காண நாம் விரும்புகிறோம். ஆனால் புலிகள் அதற்கு உடன்படுகின்றார்கள் இல்லை. நாட்டின் இறைமையைப் பேணுவதற்கு யுத்தம் புரிவதைத் தவிர எமக்கு வேறு வழியேதும் இல்லை.

— இவ்வாறு கருத்து வெளியிட்ட ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, இப்பேட்டியில் பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே. கட்சியையும் அதன் தலைவர் ரணில் விக்கிரமசிங்காவையும் கடுமையாகச் சாடினார்.

அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள ஜனாதிபதித்தேர்தல் மற்றும் பொதுத்தேர்தல் போன்றவற்றை முன்கூட்டியே நேரத்துடன் நடத்தி முடிப்பது குறித்து தமது அரசு தீவிரமாக ஆலோசனை செய்து வருவதாகயும் அவர் இப்பேட்டியில் குறிப்பிட்டார். (உ-7-21-6)


**கணக்கீடு**
D. SAM
20 மாணவர்களுக்கு மட்டும் அனுமதி
ஆரம்பம் 23. 10. 99 (சனி)

A/L 2000
பங்குடைமை குறை மாதக் க/கு
பிரிவு I 10.00 — 11.00 (ப. நே.)
பிரிவு II 1.00 — 2.00 (ப. நே.)

A/L 2001
சொத்து முடிவு செய்தல்
11.00 — 12.00 (ப.நே.)

**D. M. I.**
யாழ். நகர்
(சி/9405)



Immediate Vacancies

'WALKIN in' – Interview, will be entretained from suitable candidates, on 20 th October 1999 for the under mentioned Posts:

Lecturers in Computer Science/ Information Technology (Permanent and Visiting Lecturers)

Educational and other Qualifications:

Graduate of a recognized University in computer field or Full member of a recognized Professional body.

The ideal candidates will receive an attractive salary and other fringed benefit

Director,
I S,
100. Clock Tower Road,
Jaffna
(C/9293)



எமது புதிய
ஒடியோ
C D வெளியீடுகள்
- கண்ணுபட போகுதய்யா
- கண்மணி உனக்காக

அடுத்த ஒடியோ
C D வெளியீடு
- தாஜ்மஹால்

**மெலோடியல் மியூசிக்**
303, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(சி/9414)



எமது புதிய
வீடியோ வெளியீடு!

நாசர் – ரோஜா
நடித்த
**முகம்**
பிரதிகளை உடன்
பெற்றுக்கொள்ளலாம்.
அடுத்த வெளியீடு!
**ஜெயம்**

**சுப்பஸோ வீடியோ**
149, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(9413)



**ஷண்ணின்**
ஒடியோ CD
வெளியீடு!

- ★ கண்ணால் பேசவா
- ★ பூங்காற்றே
- ★ டிக்
- ★ எங்கிருந்தோ அழைக்கும் என் ஜீவன்
- ★ பதிவு செய்யப்பட்டு அழகிய வர்ண கவர்களுடன்

K.J. ஜேசுதாஸ் பாடிய
பஞ்சாமிர்தம்
ஓங்கார வடிவே கணேசா
அனுராதா சிறிராம் பாடிய
ஆறு படையப்பா

விஜய்யின் குசி போஸ்ரர்களுடன் பெருமளவு ஆங்கில, தமிழ் பட போஸ்ரர்கள்விற்பனைக்குண்டு குசி போஸ்ரர் பெறக் குசியாக வாருங்கள்.

**ஷண் றெக்கோடிங் ஸ்பொட்,**
பெரிய கடை,
யாழ்ப்பாணம்.
(700113)



**தோட்டவேலையாள் தேவை**

தோட்ட வேலைகளில் அனுபவம் உள்ளவர்கள் தேவை. பூந்தோட்டங்களைப் பராமரிக்கத் தெரிந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

அலுவலக நேரங்களில் நேரில் வரவும்.

முகாமையாளர்,
உதயன் பணிமனை,
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.



இன்றுமுதல்
குதூகல ஆரம்பம்!

**அபீஸ் வீடியோ சென்ரர்**
CD வீடியோ பிரதிகள்
வாடகைக்குப்
பெற்றுக்கொள்ளலாம்.

**அபீஸ் வீடியோ சென்ரர்,**
சுண்டுக்குளி.
(70074)



சிற்றியின் அதிரடி மலிவு விற்பனை
குதூகலமான உங்கள் தீபாவளியின் செலவை மீதப்படுத்த
**விற்றுத் தீர்த்தல்**
இன்றே முந்துங்கள் இன்னும் சில தினங்களில் மட்டுமே
**சிற்றி ரெக்ஸ் அன் ரெயிலர்ஸ்**
73, பெரிய கடை, யாழ்ப்பாணம்.
(சி/9409)



மாதாந்த
பயிற்சிப் பரீட்சை
(தரம் 2 முதல் 11 வரை)
20-10-99 புதன்
21-10-99 வியாழன்
பிற்பகலில் நடைபெறும்.
**Bond,** யாழ்.நகர்
(70106)



**NEW SCIENCE HALL**
கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.

**A/L DAY CLASSES**
தூய பிரயோக கணிதம்
திரு. வெகுரர்
ஆரம்பம்: 20 – 10 – 99 புதன்
காலை 10. 30 மணி
[70072]



மாணவர்களுக்கு ஒரு மகிழ்ச்சிகரமான செய்தி!

**அர்ச்சுனா** – சிறுவர் திங்கள் இதழ்

இன்னும் சில தினங்களில் உங்களோடு உறவாடுவான்

உதயன விற்பனை முகவர்களிடம் கேளுங்கள்.


இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள [illegible] 19 - 10 - 1999 இல் [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org